# 11.கார்டினல் ரிச்சல்யு

பிரெஞ்சு மன்னர் பதிமூன்றாம் லூயியின் ஆட்சியும் எதேச்சதிகாரமும் பிரான்சில் நிலைபட, அவரது அமைச்சராகப் பணியாற்றிய ரிச்சல்யு முக்கிய பங்காற்றினார். " ரிச்சல்யுவும் அவரைத் தொடர்ந்து அமைச்சரான மாசரினும் இல்லையேல் பிரெஞ்சு மன்னர்களின் எதேச்சதிகாரம், பதினேழாம் நூற்றாண்டிலேயே வீழ்ச்சியடைந்திருக்கும்" எனப்படுகிறது.

## ரிச்சல்யுவின் இளமைப் பருவம்

1585-ல் பாரிஸில் உள்ள பிரபு குடும்பம் ஒன்றில், அர்மாண்ட் டி ரிச்சல்யு பிறந்தார். 1606-ல் லூகன்-ல் பேராயராகப் பணியாற்றிய அவர், 1614-ல் கூடிய States Generalக்கு குருமார்களின் பிரதிநிதியாக அனுப்பப் பட்டார்(கிபி. 1610-ல் மன்னர் நான்காம் ஹென்றி கொலை செய்யப்பட்டதும், அவரது ஒன்பது வயது மகன் பதிமூன்றாம் லூயி அரியணை ஏறினார். அவரது தாய் மேரி டி மெடிசி, அவருக்குக் காப்பாளராக நியமிக்கப்பட்டார். தீவிரக் கத்தோலிக்கராகவும் திறமையற்றவராகவும் இருந்த மேரி டி மெடிசியின் ஆட்சியில் நிர்வாகம் சீர்கெட்டது) ரிச்சல்யுவை, அயல்நாட்டு அமைச்சராக மேரி டி மெடிசி நியமித்தார். 1622-ல் ரிச்சல்யுவிற்கு கார்டினல் அங்கியை மெடிசி பெற்றுத் தந்தார். அதுமுதல் அவர், கார்டினல் ரிச்சல்யு (Cardinal Richelieu) என்றழைக்கப்பட்டார்.

## ரிச்சல்யு அமைச்சர் ஆதல்

நாட்டின் நிர்வாகச் சீர்குலைவிற்கு தன் தாயின் திறமையின்மையே காரணம் என்று உணர்ந்த பதிமூன்றாம் லூயி, அவரை பொளாய்ஸ்-ல் சிறைவைத்து விட்டு தானே ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். பின்னர், 1624-ல் , ரிச்சல்யுவை தன் முதலமைச்சராக பதிமூன்றாம் லூயி நியமித்தார். 1624 முதல் 1642 வரை, அமைச்சராக ரிச்சல்யு இருந்த காலத்தில் பெயரளவில் மட்டுமே மன்னராக பதிமூன்றாம் லூயி இருந்தார்.

## ரிச்சல்யுவின் நோக்கங்கள்

பிரபுக்களின் வலிமையைக் குறைத்து, பிரான்சின் ஒற்றுமையைப் பாதுகாப்பது, வலிமையான மையப் படுத்தப்பட்ட ஏகபோக முடியாட்சியை உருவாக்குவது, ஹாப்ஸ்பர்க்கின் இழப்பில் பிரான்சின் எல்லைகளை விரிவுபடுத்தல் ஆகிய மூன்று நோக்கங்களைக் கொண்டிருந்த ரிச்சல்யு, அவற்றை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டார்.

## ரிச்சல்யுவின் உள்நாட்டுக் கொள்கை

தன் உள்நாட்டுக் கொள்கையில் சிறப்பான வெற்றிகளைப் பெற்றதன் மூலம், மன்னராட்சியை நிலை நிறுத்துவதில் ரிச்சல்யு வெற்றி கண்டார்.

### i) ஹியூகோனாக்களின் அரசியல் சலுகைகளை அகற்றுதல்

நான்காம் ஹென்றியின் நான்டெஸ் அணையின் மூலமாக அரசியல் உரிமைகளையும் சமய சுதந்திரத்தையும் பெற்றிருந்த ஹியூகோனாக்கள், சௌபைஸ் (Soubise) தலைமையில், *1625*-ல், கிளர்ச்சி செய்தனர். அவர்களைத் தோற்கடித்த ரிச்சல்யு, *1629*-ல், **அலேய்ஸ் ஆணை** (Edict of Alais) மூலம் சமயச் சுதந்திரத்தை மட்டும் அளித்துவிட்டு, அரசியல் உரிமை களைப் பறித்தார். ஹியூகோனாக்களின் கோட்டைகளும் அரண்மனைகளும் கைப்பற்றப்பட்டன.

### ii) பிரபுக்கள் மீது நடவடிக்கை

பிரபுக்களின் சிறப்புரிமைகளும் அதிகாரங்களும் மன்னரின் அதிகாத்திற்குத் தடையாக இருந்தன. பிரபுக்களை அடக்க, இரண்டு ஆணைகளை ரிச்சல்யு பிறப்பித்தார். முதல் ஆணையின் மூலம். தம் சொந்தப் பிரச்னைகளுக்காக பிரபுக்கள் தமக்குள் சண்டையிடுவது தடை செய்யப்பட்டது. இரண்டாவது ஆணையின் மூலம் பிரபுக்களின் கோட்டைகள் உடைக்கப்பட்டன. இவ்வாறு, பிரபுக்களின் அதிகாரம் வெகுவாக குறைக்கப்பட்டது.

### iii) நிர்வாகச் சீர்திருத்தங்கள்

மன்னரின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக, நிர்வாகம் முழுதும் மன்னரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. மன்னரின் ஆலோசனை சபை ஏற்படுத்தப்பட்டு, அதில் நடுத்தர மக்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் கண்காணிப்பாளர் (Intendant) நியமிக்கப்பட்டார். மன்னரின் தலைமையில் நிரந்தரப் படையை ரிச்சல்யு உருவாக்கினார்.

நாடாளுமன்றமும், நீதிமன்றமும் மன்னரின் எதேச்சதிகாரத்திற்குத் தடையாக இருந்தன. எனவே நாடாளுமன்றத்தைக் கூட்டாமலே ரிச்சல்யு ஆட்சி செய்தார். பிரெஞ்சு கலைக் கூடத்திற்கு (French Academy) ரிச்சல்யு அடிக்கல் நாட்டினார். கெஸட் (Gazette) என்ற அரசு இதழை அவர் தொடங்கினார்.

### iv) சமயக் கொள்கை

கத்தோலிக்கராக இருந்தாலும், ரிச்சல்யு மதவெறியர் அல்ல. ஹியூகோனாக்களைத் துன்புறுத்தாத அவர், பிரெஞ்சு பிராடஸ்டண்டுகளுக்கு சமயச் சுதந்திரம் அளித்தார். அதற்காக அவரை, ஹியூகோனாக்களின் போப் (Pope of the Huguenots) என்றும் நாத்திகர்களின் தந்தை என்றும் அழைத்தனர்.

## ரிச்சல்யுவின் அயல்நாட்டுக் கொள்கை

பிரான்சின் எல்லைகளை வலிமைப்படுத்துவதும், ஸ்பெயின், ஆஸ்திரியா ஆகிய நாட்டு ஹாப்ஸ்பர்க் வம்சத்தினரின் அதிகாரத்தை நசுக்கவும், ஐரோப்பாவில் தலைசிறந்த நாடாக பிரான்சை ஆக்கவும் ரிச்சல்யு விரும்பினார்.

### *1)* வால்டலைன் மீட்பு

ரிச்சல்யு அமைச்சராவதற்கு முன்பே, மிலான்-பேரரசு இடையே போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த ஸ்விஸ் கழகத்திடமிருந்து வால்டெலைன் கணவாயை, *1622*-ல் ஸ்பெயின் கைப்பற்றியது. தான் அமைச்சரானவுடன் ஸ்விஸ் கழகத்திற்கு ஆதரவாக ஒரு படையை ரிச்சல்யு அனுப்பினார். அப்படையிடம் ஸ்பெயின் தோற்றது. அதனால் பிரான்ஸ்-ஸ்பெயின் இடையே *1626*-ல் ஏற்பட்ட மான்ஸோன் **உடன்படிக்கையின்படி** (Treaty of Monson) **வால்டெலைன் கணவாய்** (Valtelline pass) மீண்டும் ஸ்விஸ் கழகத்திடம் தரப்பட்டது.

### *2)* மாண்டுவா வாரிசுரிமைப் பிரச்னை *(1631)*

*1627*-ல், மாண்டுவா பிரபு (Duke of Mantua) இறந்தார். பிரான்சிலுள்ள நெவர்ஸ் (Nevers) பிரபுவே அவரது வாரிசு.

ஆனால் மாண்டுவாவை ஸ்பெயினின் படைகள் கைப்பற்றின. ஸ்பெயினின் படைகளை வெளியேற்றி, மாண்டுவாவை நெவர்ஸ் பிரபுவிற்குக் கிடைக்கச் செய்தார் ரிச்சல்யு.

*3) முப்பதாண்டுப் போர்*

ஜெர்மனியில் நடைபெற்றுவந்த முப்பதாண்டுப் போர், ஹாப்ஸ்பர்க்குகளை அழிக்க ரிச்சல்யுவிற்கு வாய்ப்பளித்தது. முதலில் போரில் நேரடியாக ஈடுபடாமல், ஜெர்மனியில் பிராடஸ்டண்டுகளுக்கும் ஸ்வீடன், நெதர்லாந்து ஆகிய நாட்டு மக்களுக்கும் ரிச்சல்யு உதவினார். பின்னர் 1635-ல் ஸ்பெயின் மீது போர் தொடுத்து அல்ஸாஸ், ரோசில்லான் ஆகியவற்றை பிரான்ஸ் பிடித்தது. 1640-ல் ஸ்பெயினுக்கு எதிராகப் புரட்சி செய்த போர்ச்சுகலுக்கு பிரான்ஸ் உதவியது. முப்பதாண்டுப் போர் முடிவதற்குள், 1642-ல் ரிச்சல்யு இறந்தார். எனினும் போரின் முடிவில் பிரான்சுக்கே சாதகமாக நிலை ஏற்பட்டது.

## மதிப்பீடு

பிரான்சில் நிலவிய குழப்பத்திலிருந்து அமைதியை நிலைநாட்டுதல், மக்களாட்சி மன்றங்களையும் பிரதிநிதித்துவ சபைகளையும் அடக்குதல், பிரபுக்கள் மற்றும் ஹியூகோனாக்களை ஒடுக்குதல், ஹாப்ஸ்பர்க்குகளின் வீழ்ச்சிக்கு அடிகோலுதல் ஆகியவற்றில் வெற்றி கண்டார் ரிச்சல்யு. அவரது ஆட்சிக் காலம் இருந்திராவிடில், "பதினான்காம் லூயியின் காலம்" என்ற ஒன்று தோன்றியிருக்க முடியாது எனப்படுகிறது. எனினும், "மன்னரின் பெருமைக்காக மக்களின் மகிழ்ச்சியை அவர் தியாகம் செய்தார்" என்கின்றனர்.

# 12. கார்டினல் மாசரின்

பிரெஞ்சு மன்னர்கள் பதிமூன்றாம் லூயி மற்றும் பதினான்காம் லூயியின் காலத்தில் அவர்களது முதலமைச்சராகப் பணியாற்றிய ரிச்சல்யுவும் மாசரினும் இல்லையேல், லூயிக்களின் ஆட்சி சிறப்பிழந்திருக்கக் கூடும் எனப்படுகிறது. அத்தகைய சிறப்பான ஆட்சியைத் தந்த மாசரினின் சாதனைகள் பற்றி இங்கு காண்போம்.

## மாசரினின் இளமைப் பருவம்

இத்தாலியில் உள்ள நேப்பிள்ஸ்-க்கு அருகில் 1602-ல் மாசரின் பிறந்தார். துறவறப் பணிக்காக உரோமாபுரி மற்றும் ஸ்பெயினில் கல்வி பயின்ற அவர், பாரிசில் போப்பின் தூதுவராகப் பணியாற்றினார். ரிச்சல்யுவின் கவனத்தைக் கவர்ந்த மாசரின், ரிச்சல்யுவின் வேண்டுகோளின் பேரில் பிரான்சில் தொண்டாற்ற முன் வந்தார். 1641-ல் கார்டினல் அங்கியைப் பெற்ற மாசரினை, தான் இறக்கும் தருவாயில், பிரான்சின் தலைமை அமைச்சர் ஆக்கினார் ரிச்சல்யு. 1642 முதல் 1661 வரை ஐரோப்பிய அரசியலில் விடிவெள்ளியாக மாசரின் இருந்தார்.

## மாசரினின் சாதனைகள்

1642-ல் ரிச்சல்யுவும், 1643-ல் பதிமூன்றாம் லூயியும் இறந்தனர். 1643-ல் பிரெஞ்சு மன்னரான ஐந்து வயது நிரம்பிய பதினான்காம் லூயி, தாய் ஆன் (Anne)-ஐ காப்பாளராகவும் கார்டினல் மாசரினை தன் முதலமைச்சராகவும் நியமித்தார். மாசரினின் திறமையான ஆட்சியால்தான் அழிவிலிருந்து பதினான்காம் லூயியின் ஆட்சி காப்பாற்றப்பட்டதாம்.

## முப்பதாண்டுப் போரில் மாசரினின் பங்கு

முப்பதாண்டுப் போரின் முடிவில், மாசரின்-க்கு உதவியாக கோண்டே பிரபு (Duke of Conde) வும் டூரேன் பிரபு (Marquis of Turenne) வும் செயல்பட்டனர். 1643-ல் ஸ்பானியப் படையை, ரொக்ராய் (Rocroy) போரிலும், 1648-ல் லென்ஸ் (Lens) போரிலும் கோண்டே வெற்றி கொண்டார். மாசரினின் அரசியல் வெல்திறத்தால் வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கை (1644) மூலம் முப்பதாண்டுப் போர் முடிவுக்கு வந்தது. அவ்வுடன்படிக்கையை எழுதித் தந்தவருமான மாசரினுக்கு, தனிப்பட்ட முறையிலும், உடன்படிக்கையால் பெருமை வந்தது.

## *ஃபுரோன்டே (1648-52)*

மாசரினை விரும்பாமல், அவருக்கெதிராக மக்களும் பிரபுக்களும் செய்த கிளர்ச்சிகளே ஃபுரோன்டே எனப்பட்டன. பணத்தின் தேவை அதிகரிக்கவே, பாரிஃப் நகருக்குள் வரும் பொருள்கள் மீது Octroi என்ற நகர வரியை விதிக்கும் ஆணையை 1648-ல் மாசரின் வெளியிட்டார். அவ்வாணையைப் பதிவு செய்ய பிரெஞ்சுப் பாராளுமன்றம் மறுத்தது. பாராளுமன்றத்தின் போக்கை அறிந்த மாசரின், மக்கள் கிளர்ச்சி செய்த பின், வரிகளைக் குறைப்பதாக அறிவித்தார்.

1649-ல் வரிகளை வசூலிக்கவும் படை திரட்டவும், பிரெஞ்சுப் பாராளுமன்றம் முயன்றது. இதனால் மன்னர்-பாராளுமன்றம் இடையே உள்நாட்டுப் போர் தொடங்கக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. போரைத் தவிர்க்க 1649-ல், ரூயில் உடன்பாடு (Peace of Rueil) கையெழுத்தாயிற்று.

பிரபுக்களின் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக, முப்பதாண்டுப் போரின் கதாநாயகன் கோண்டே பிரபுவை 1650-ல் மாசரின் கைது செய்தார். அதை எதிர்த்து பாரிஸ் மக்கள் கிளர்ச்சி செய்யவே, கோண்டேவை விடுதலை செய்ததுடன், நாட்டை விட்டும் மாசரின் வெளியேறினார். ஸ்பெயினில் இருந்து கொண்டு, கிளர்ச்சியை அடக்க, காப்பாளர் ஆன்-க்கு மாசரின் ஆலோசனை அளித்தார். டுரேன்-க்கு கைக் கூலியும், பால் டி கோண்டிக்கு கார்டினல் பதவியும் வழங்கப்பட்டது. இதனால் கிளர்ச்சியின் தலைவர்கள் அரசின் பக்கம் சாய்ந்தனர். டுரேன்-ஆல் 1652-ல் தோற்கடிக்கப்பட்ட கோண்டே பிரபு ஸ்பெயினுக்கு ஓடினார். அத்துடன் ஃபுரோன்டே கிளர்ச்சிகள் முடிவுற்றன.

## ஸ்பெயினுடன் போர்

முப்பதாண்டுப் போர்த் தோல்விக்குப் பிறகும் பிரான்சுக்கு அடிபணியாத ஸ்பெயினை அடி பணிய வைக்க, இங்கிலாந்தின் ஆலிவர் கிராம்வெல்லின் உதவியை மாசரின் நாடினார். பிரிட்டிஷ் படையின் உதவியுடன் டுன்ஸ் (Dunes) போரில், 1658-ல் ஸ்பெயினின் படை தோற்கடிக்கப்பட்டது. பிரனீஸ் உடன்படிக்கை (Treay of Pyrenees-1659) மூலம் போர்

முடிவுற்றது. பிரான்ஸ்-ஸ்பெயின் இடையே ஏற்பட்ட அவ்வுடன்படிக்கையால்,

* ரோசில்லான், ஆர்டாய்ஸ்-ன் ஒரு பகுதி, ஸ்பானிய நெதர்லாந்தின் பல நகரங்கள் ஆகியவற்றை பிரான்ஸ் பெற்றது.

* கோண்டே பிரபு மன்னிக்கப்பட்டு, பிரான்சுக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட்டார்.

* பதினான்காம் லூயிக்கும், ஸ்பெயின் மன்னர் நான்காம் பிலிப்பின் மகள் மரிய தெரசாவிற்கும் திருமணம் செய்யப்பட்டது. ஐந்து லட்சம் பவுன்களை சீதனமாக பெற்றுக் கொண்டு, ஸ்பானிய அரியணை மீதான உரிமையை மரிய தெரசா விட்டுக் கொடுத்தார்.

## மதிப்பீடு

வெஸ்ட்ஃபேலியா உடன்படிக்கையும் பிரனீஸ் உடன்படிக்கையும் மாசரினின் வெல்திறனுக்குக் கிடைத்த வெற்றிகள். பதினான்காம் லூயிக்கு அவர் ஒரு அமைச்சர் என்று கூறுவதைக் காட்டிலும், குரு என்ற கூறுவதே பொருந்தும். அத்துமீறிய எதேச்சதிகாரத்தை நாட்டில் நிறுவக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கித் தந்த மாசரின், 1661-ல் இறந்தார். ரிச்சல்யுவின் கொள்கைகளைத் தொடர்ந்து கடைபிடித்த மாசரினை "ரிச்சல்யுவின் நிழல்" என்கின்றனர்.

# 13. மகா பீட்டர்

*1533 முதல் 1584 வரை ரஷ்யாவை ஆட்சி செய்த பயங்கர ஐவான் (Ivan the Terrible) என்பவர் Tsar பட்டம் சூட்டிக் கொண்ட முதல் அரசர். பின்னர், 1613-ல், மைக்கேல் ரோமனாவ் என்பவர் ரோமனாவ் வம்சத்தை நிறுவினார். 1613 முதல் 1917 வரை ரஷ்யாவை ஆட்சி செய்த ரோமனாவ் (Romanov) வம்சமே, ரஷ்யாவை கடைசியாக ஆட்சி செய்த வம்சமாகும். அவ்வம்ச அரசர்களுள் சிறந்தவரான மகா பீட்டர் (Peter the Great) செய்த சாதனைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.*

## மகா பீட்டர் (1682-1725)

மைக்கேல் ரோமனாவ்-ன் பேரனான பீட்டர், 1682-ல் பத்தாவது வயதில், ரஷ்யாவின் Tsar ஆனார். ஆட்சிப் பொறுப்பை நேரடியாக பீட்டர் ஏற்கும் வரை (1689 வரை), அவரது ஒன்றுவிட்ட சகோதரி சோஃபியா, பகர ஆட்சியாளராக இருந்தார்.

### பீட்டரின் நோக்கங்கள்

ரஷ்ய அரியணையில் பீட்டர் அமர்ந்தபோது, மிகவும் பின்தங்கிய மற்றும் நாகரிகமற்ற நாடாக, ரஷ்யா இருந்தது. எனவே, ரஷ்யாவை முன்னேற்றுவதற்காக,

* பிரான்சில் பதினான்காம் லூயி அமைத்த நல்லாட்சி வல்லாட்சி அரசை, ரஷ்யாவிலும் அமைத்தல் * ரஷ்யாவின் பொருளாதார நிலையை உயர்த்தல் * ஐரோப்பிய மாதிரியில் ரஷ்ய இராணுவத்தை சீரமைத்தல் * ரஷ்யாவை ஐரோப்பியமயமாக்கல் ஆகிய நோக்கங்களை பீட்டர் கொண்டிருந்தார்.

## பீட்டரின் உள் நாட்டுக் கொள்கை

தன் நோக்கங்கள் கைகூடும் வண்ணம், உழைப்பதற்குத் தேவையான மன உறுதியையும் திறமையும் பீட்டர் பெற்றிருந்தார். தன் சாதனைகள் மூலம் ரஷ்ய வரலாற்றை மாற்றி அமைத்த பீட்டரை, மகா பீட்டர் (Peter the Great) என்பது சரியே.

### i) ரஷ்யாவை ஐரோப்பியமயமாக்கல்

பீட்டர் பதவிக்கு வந்தபோது, பிற்போக்கான நாடாக ரஷ்யா இருந்தது. அதனால் ரஷ்யாவை, ஐரோப்பிய நாகரிகத்தில் கடைசிக் குழந்தை (Last born child of the European Civilisation) என்கின்றனர். ரஷ்ய மக்களை சீர்திருத்த அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், பழங்கால நடைமுறைகளையும் மாற்றுவதற்கான ஆணைகளை பீட்டர் வெளியிட்டார். அவற்றிற்கு, ஆரம்பத்தில் ரஷ்யர்கள் எதிர்ப்பு

காட்டினாலும், படிப்படியாக, ஐரோப்பியர்களைப் போல ஆடை அணிதல், கல்வி கற்றல், நல்ல சமூக பழக்க வழக்கங்களை மேற்கொள்ளல் போன்றவற்றைச் செய்ய ரஷ்யர்கள் முன்வந்தனர்.

தாடி வளர்ப்பது தடை செய்யப்பட்டது. தாடி வளர்ப்பவர்க்கு அதன் நீளத்திற்கேற்ப வரி விதிக்கப்பட்டது. ஐரோப்பியர்கள் போல ஆடை அணிதல், பிரெஞ்சு அரசவை முறைகளைப் பின்பற்றல், புகை பிடித்தல் போன்றவற்றை பீட்டர் ஆதரித்தார். அயல்நாட்டு நிபுணர்களின் உதவியுடன் பாலங்கள், சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை பீட்டர் கட்டினார்.

ஜனவரி முதல் தொடங்கும் கிறித்துவ ஆண்டு முறை புகுத்தப்பட்டது. சிறந்த கடற்படையை உருவாக்கிய பீட்டரை, ரஷ்ய கடற்படையின் தந்தை என்றழைத்தனர். ரஷ்யாவில் முதல்முறையாக செய்தித்தாளையும், மருத்துவ மனை களையும் நிறுவியவரும் கண்காட்சி சாலையை அமைத்தவரும் பீட்டரே ஆவார்.

பீட்டரின் சீதிருத்தங்களை எதிர்த்தவர்களுள் அவருடைய மகன் அலக்சஸும் ஒருவர். தான் புதிதாகக் கட்டிய பீட்டர்ஸ்பர்க் நகரத்தை அலங்கரித்து, அதை தலை நகராக்குவதில் பீட்டர் முனைந்திருக்கும்பொழுது, "தான் அரசனானதும் மாஸ்கோவையே தலைநகராக்குவேன்" என்று கூறி தந்தையின் முயற்சியை அலக்சஸ் அலட்சியப்படுத்தினார். வெளிநாடுகளில் பீட்டர் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, ஜெர்மனிக்குச் சென்று தலைமறைவாக அலக்சஸ் வாழ்ந்தார். அவரைக் கண்டுபிடித்து, அவர் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டை விதித்து மரண தண்டனை அளித்தார் பீட்டர்.

### II) ஆட்சியை ஒருமுகப்படுத்தல்

தன் அதிகாரங்களை வலுப்படுத்த பிரபுக்களின் அதி காரங்களை பீட்டர் குறைத்தார். தன் சீர்திருத் தங்களுக்குத் தடையாக இருந்த ஸ்ட்ரெல்சி (Strettsi) எனும் அரச மெய்க்காப்பாளர் படையை அவர் ஒழித்தார். ரஷ்யப் பாராளுமன்றமான டூமா (Duma)வைக் கலைத்தார். ரஷ்யாவை எட்டு மாநிலங்களாகப் பிரித்து அவற்றை ஆளுநர்களின் கீழ் செயல்படவைத்தார்.

மக்களிடம் செல்வாக்கு பெற்றிருந்த, ரஷ்ய திருச்சபைத் தலைவர் பாட்ரியார்க் பதவியை ஒழித்துவிட்டு, தன் கட்டுப்பாட்டிற்குட்பட்ட (Holy Synod) குழுவின் கீழ் திருச் சபையைக் கொண்டு வந்தார். இதன் மூலம் ஒருமுகப் படுத்தப்பட்ட முடியாட்சியை நிறுவுவதில் பீட்டர் வெற்றி கண்டார்.

### III) இராணுவச் சீர்திருத்தங்கள்

ஐரோப்பியப் படைகளின் மாதிரியில், ரஷ்ய ராணுவத்தை உருவாக்க பீட்டர் முயன்றார். நிலமானியப் படைகளுக்கு பதிலாக இரண்டு லட்சம் வீரர்கள் கொண்ட நிலையான படை உருவாக்கப்பட்டது. அரசரின் ஆணை களுக்குக் கட்டுப்பட்டே படைத் தலைவர்கள் செயல்பட்டனர். படைத் தலைவர்களையே அரசாங்கப் பணியிலும் பீட்டர் அமர்த்தினார். அவர்கள், நாளடைவில் பயிற்சி பெற்று சிறந்த அலுவலர்களாயினர். இவ்வாறு ரஷ்யாவில் முதல் முறையாக நிலையான அரசாங்க ஊழியர் முறை (Permanent Civil Service) ஏற்படுத்தப்பட்டது

## பீட்டரின் அயல்நாட்டுக்கொள்கை

பால்டிக் கடல் மற்றும் கருங்கடல் பகுதிகளில் உள்ள துறைமுகங்களை மேற்கின் சன்னல்கள் (Windows to the West) என்று கருதிய பீட்டர், அப்பகுதிகளில் தன் ஆதிக்கத்தை நிறுவ முயன்றார். அம்முயற்சிகளே அவருடைய அயல்நாட்டுக் கொள்கை.

### i) ஸ்வீடனுடன் போர்

ஸ்வீடனின் ஏரியாகத் திகழ்ந்த பால்டிக் கடலின் மேற்குக் கரையில் இருந்ததால் செல்வம் கொழிக்கும் நாடாக ஸ்வீடன் இருந்தது. ஸ்வீடனைக் கண்டு பொறாமை கொண்ட பீட்டர், 1699-ல் டென்மார்க் மற்றும் போலந்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன் தவிர்க்க முடியாத விளைவே பெரும் வடக்குப் போர் (Great Northern War) ஆகும். இப்போர் 1699 முதல் 1721 வரை தொடர்ந்தது வடக்குச் சூறாவளி (Hurricane of the North) என்று குறிப்பிடப்பட்ட ஸ்வீடன் மன்னர் பனிரண்டாம் சார்லஸ், டென்மார்க் மீது படையெடுத்து அதன் மன்னரைத் தோற்கடித்தார்.

ஸ்வீடனுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு, போரிலிருந்து டென்மார்க் மன்னர் விலகினார்.

அடுத்து, *1700*-ல் ரஷ்யப் படைகளை, நார்வா (Narva)வில் தோற்கடித்த சார்லஸ், போலந்திற்குள் புகுந்தார். போலந்து மன்னர் இரண்டாம் அகடஸ்டஸ், சார்லஸிடம் பணிந்தார். போலந்துடன் போரில் சார்லஸ் ஈடுபட்டிருந்தபோது, ஸ்வீடனின் பெரும்பகுதியை பீட்டர் கைப்பற்றினார். அதை அறிந்த சார்லஸ், ரஷ்யாவின் மீது படையெடுத்தார். ஆனால் ரஷ்யப் படைகளால் விரட்டப்பட்ட சார்லஸ், துருக்கிக்குத் தப்பிச் சென்றார். *1713*-ல் ஸ்வீடன் திரும்பிய சார்லஸ், *1718*-ல் இறந்தார். *1721*-ல் நிஸ்டட் (Nystad)-ல் ஏற்பட்ட உடன் படிக்கையின்படி எல்லா பால்டிக் நாடுகளும் ரஷ்யாவிற்குக் கிடைத்தன.

பால்டிக் கடற்கரைப் பகுதியில் புகழ்மிக்க செயின்ட் பீட்டர்ஸ்பர்க் (St.Petersburg) நகரத்தை பீட்டர் அமைத்தார். அதை முதன்மையான வர்த்தகத் துறைமுகமாகவும், ரஷ்யாவின் தலைநகராகவும் அவர் ஆக்கினார்.

## ii) துருக்கி மீது போர்

ஐரோப்பியர்களுடன் தொடர்பு கொள்ள பால்டிக் கடல் பகுதி மீதான ஆதிக்கம் அவசியமாக இருந்ததைப் போலவே , கீழ்த்திசை நாடுகளுடன் வாணிகம் செய்ய கருங்கடலில் ரஷ்ய ஆதிக்கம் வலுக்க வேண்டுமெனக் கருதிய பீட்டர், துருக்கி மீது படையெடுத்தார்.

*1696*-ல் கருங்கடலின் சாவி (Key to the Black Sea) எனப்பட்ட ஆஸோவ் (Azov)-ஐ பீட்டர் கைப்பற்றினார். அதை ரஷ்ய கடற்படையின் தலைநகரமாக அவர் ஆக்கினார். ஆனால் *1711*-ல் அஸோவ் மீண்டும் துருக்கியரிடம் வீழ்ந்தது.

இரண்டாவது படையெடுப்பில், துருக்கியரால் தோற்கடிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்த பீட்டரை, அவரது மனைவி கேத்தரைன், தன் ஆபரணங்களையும் சேமித்து வைத்திருந்த பணத்தையும் துருக்கி சுல்தானிடம் கொடுத்து காப்பாற்றினார். கேத்தரைனின் முயற்சியால் துருக்கியர்-பீட்டர் இடையே ஓர் ஒப்பந்தமும் ஏற்பட்டது. அதற்குப் பிறகு துருக்கி மீது படையெடுப்பதை பீட்டர் நிறுத்திக் கொண்டார்.

## மதிப்பீடு

ரஷ்ய மக்களை நாகரிகமானவர்களாக்கவும், ரஷ்யாவை பிற ஐரோப்பிய நாடுகள் மதிக்க வேண்டுமென்பதற்கும் பெருமுயற்சி செய்த பீட்டர் அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். நாட்டிற்கும் மக்களுக்கும் சிறந்த சேவை செய்த அவரை, ரஷ்யாவின் தந்தை, தந்தை நாட்டின் தந்தை (Father of Father Land), மாபெரும் பீட்டர் என ரஷ்ய மக்கள் அழைத்தனர்.

நாட்டின் நிரந்தர வளர்ச்சிக்கு, சிறந்த அரசியல் முறை அவசியமென்பதை முதலில் கண்டவர் பீட்டரே. "பீட்டர், ரஷ்யாவிற்குத் தந்தது வெறும் அரசியல் திட்டம் மட்டுமல்ல, விரிந்த நாடு மட்டுமல்ல, புதுவாழ்க்கை முறையே ஆகும்'. அதனால் தான் ரஷ்யர்கள் மட்டுமல்லாமல் உலகமே அவரைப் போற்றுகின்றது.

# 14. இரண்டாம் காதரீன்

ரஷ்ய மன்னர் மகா பீட்டருக்குப் பின் ஆட்சி செய்த எலிசபெத் அரசி இறந்த பிறகு, 1762-ல் மூன்றாம் பீட்டர் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆனால் உண்மையில், அவருடைய மனைவி (Tsarina-அரசி)யான கேத்தரைனே (Catherine) ஆட்சி நடத்தினார். பிறப்பால் ஜெர்மானியராகவும், வளர்ப்பால் பிரெஞ்சாகவும், சுவீகாரத்தால் ரஷ்யராகவும் இருந்த கேத்தரைன், மூன்றாம் பீட்டர் ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களிலேயே அவரை சிறைவைத்து பின்னர் கொலை செய்துவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றினார்.

மகா பீட்டரின் பணிகளையும் சீர்திருத்தங்களையும் தொடர்ந்த கேத்தரைன், 1762 முதல் 1796 வரை, ஆட்சி செய்தார்.

## கேத்தரைனின் உள்நாட்டுக் கொள்கை

பதினெட்டாம் நூற்றாண்டின் ஒளிமிக்க வல்லாட்சி யாளர்களுள் கேத்தரைனும் ஒருவர். பிரான்சைப் போலவே, ரஷ்யாவிலும் நல்லாட்சி வல்லரசை நிறுவ அவர் விரும்பினார். பிரெஞ்சுத் தத்துவ மேதைகளின், குறிப்பாக, வால்டேரின் போதனைகளைப் பின்பற்றியே அவரது உள்நாட்டுக் கொள்கை அமைந்தது.

### சீர்திருத்தங்கள்

ரஷ்யாவின் சட்டத்தை சரியான முறையில் தொகுக்க, சட்ட மன்றக் குழு (Legislative Commission) ஒன்றை, 1767-68 ல் , மாஸ்கோவில் கேத்தரைன் கூட்டினார். அக்குழுவின் பரிந்துரைகளை, எதிர்கால சட்ட மாற்றங்களுக்கு கேத்தரைன் பயன்படுத்தினார்.

நிர்வாக வசதிக்கென, நாட்டை பல மாநிலங்களாகவும், மாவட்டங்களாகவும் பிரித்து, ஒவ்வொரு மாநிலமும் ஓர் ஆளுநராலும், ஒவ்வொரு மாவட்டமும் ஓர் உதவி ஆளுநராலும் ஆளப்பட்டன.

திருச்சபையின் சொத்துக்களை தேசிய மயமாக்கினார். விவசாயிகளையும் முன்னேற்ற அவர் விரும்பினார். ஆனால் அதை பிரபுக்கள் விரும்பாததால் விவசாயிகள் பிரச்சனையில் அவர் தலையிடவில்லை. கல்வி, கலை, இலக்கியம் ஆகிய வற்றிற்கும் அவர் ஆதரவளித்தார். அதனால் மக்களின் மூடப்பழக்க வழக்கங்கள் குறைந்தன.

### ரஷ்யாவை ஐரோப்பிய மயமாக்கல்

மேலை நாட்டுப் பழக்க வழக்கங்களை ரஷ்ய மக்களிடையே புகுத்த, மகாபீட்டர் செய்த முயற்சிகளை கேத்தரைன் தொடர்ந்தார். அவர் காலத்தில், நாட்டின் முதல் மொழியாக பிரெஞ்சு மொழியும், இரண்டாவது மொழியாக ரஷ்ய மொழியும் இருந்தன. மக்களின் அறியாமையைக் களைய பல கல்விச் சீர்திருத்தங்கள் செய்தார். பிரெஞ்சு நாட்டு அறிஞர்கள் வால்டேர், டிடெராட் போன்றவர்களை அவர் ஆதரித்தார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்-ல், பிரெஞ்சு மாதிரியில் ரஷ்ய கலைக்கூடம் (Russian Academy) ஒன்று அமைக்கப்பட்டது.

## அயல் நாட்டுக் கொள்கை

அயல் நாட்டு விவகாரங்களிலும் மகா பீட்டரின் கொள்கையையே கேத்தரைன் பின்பற்றினார். பால்டிக் மற்றும் துருக்கி பகுதிகளில் ரஷ்யாவின் ஆதிக்கம் பரவ வேண்டுமென அவர் விரும்பினார். ஆனால் அதில் அவர், நேர்மையற்ற முறையிலேயே நடந்து கொண்டார்.

### போலந்து பிரிவினைகள்

*1764*-ல், பிரஷ்ய மன்னர் மகா ஃபிரடெரிக்கின் உதவியால் தனக்கு வேண்டியவரான ஸ்டானிஸ்லாஸ்போனியா டொவஸ்கியை போலந்து நாட்டின் மன்னராக கேத்தரைன் தேர்ந்தெடுத்தார். எட்டாண்டுகளுக்குப் பின், ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் போலந்தை தங்களுக்குள் பிரித்துக் கொண்டன. அதுவே போலந்தின் முதல் பிரிவினை (First Partition of Poland - 1772) எனப்பட்டன. அதில் டிவினா மற்றும் டினிபர் நதிகளுக்கு கிழக்கே உள்ள வெள்ளை ரஷ்யாவை, ரஷ்யா பெற்றது.

இச்சூழ்நிலையில், தங்களிடையே இருந்த வேற்றுமைகளை மறந்து, ஒன்றுபட்டு, கோஷியுஸ்கோ (Kosciuszko) தலைமையில், தங்கள் அரசியல் முறையை மாற்றி அமைக்க போலந்து மக்கள் முற்பட்டனர். அதற்கு ஒப்புக்கொள்ளாத கேத்தரைன், மறுபடியும் போலந்தை பங்கு போட்டுக்கொள்ள முற்பட்டார். ஆதுவே போலந்தின் இரண்டாவது பிரிவினை (Second Partition of Poland-1793) எனப்பட்டது.

அதை எதிர்த்த கோஷியுஸ்கோ, தோற்கடிக்கப்பட்டு சிறைவைக்கப்பட்டார். *1795*-ல், ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ரஷ்யாவுடன் சேர்ந்து போலந்தை மீண்டும் பங்கு போட்டுக் கொண்டன. அது போலந்தின் மூன்றாம் பிரிவினை எனப்பட்டது. இவ்வாறாக, போலந்தின் வலிமையைக் குறைக்க, தான் செய்த முயற்சியில் கேத்தரைன் வெற்றி கண்டார்.

### துருக்கியுடன் போர் *(1768-74)*

ரஷ்யாவின் கொடுமைகளால் பெரும்பாலான போலந்து மக்கள், துருக்கியில் தஞ்சம் புகுந்தனர். அவர்களை விரட்டிக் கொண்டு, துருக்கிக்குள் ரஷ்ய துருப்புக்கள் நுழைந்தன.

எனவே பிரான்சின் தூண்டுதலின் பேரில், *1768-ல்*, ரஷ்யா மீது துருக்கி சுல்தான் போர் தொடுத்தார். அதில் அசோவ், மொலடேவியா, வாலாச்சியா ஆகிய பகுதிகளை ரஷ்யா கைப்பற்றியது. ரஷ்யா-துருக்கி இடையேயான போர், *1774-ல்*, குசுக் கைநார்ஜி (Kutchuk kainardji) உடன்படிக்கையின்படி முடிவுற்றது. அதனால், கருங்கடல் பகுதியில் ரஷ்யா ஆதிக்கம் பெற்றது; கான்ஸ்டாண்டிநோபிளில் உள்ள சர்ச்சுகளின் காப்பாளராக ரஷ்யா ஆக்கப்பட்டது. நிஸ்டர் நதி, ரஷ்யா-துருக்கி நாடுகளின் எல்லைக் கோடாக நிர்ண யிக்கப்பட்டது.

## கிரேக்க திட்டம்

ஐரோப்பாவிலிருந்து துக்கியை விரட்டிவிட்டு, கிரேக்கப் பேரரசை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்த கேத்தரைன் முயன்றார். அதற்காக, ஆஸ்திரியாவின் இரண்டாம் ஜோசப்பும் *1781-ல்* ஒரு உடன்பாடு செய்துகொண்டு, *1783-ல்* கிரிமியாவை அவர் கைப்பற்றினார். அதனால் துருக்கிய ருடனான கேத்தரைனின் இரண்டாவது போர் தொடங்கியது. அப்போர், ஜேஸி உடன்படிக்கையில் முடிவுற்றது.

## மதிப்பீடு

மகா பீட்டர் வகுத்த உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுக் கொள்கையில் நம்பிக்கை வைத்து அதைத் தொடர்ந்த கேத்தரைன், ரஷ்யாவின் மதிப்பை மிகவும் உயர்த்தினார். கருங்கடல் பகுதி வரை ரஷ்யாவை விரிவுப்படுத்தினார். துருக்கியை அடிபணியச் செய்தார். அவரது பணிக்காக அவரை, மாபெரும் கேத்தரைன் அரசி என்று அன்புடன் மக்கள் அழைத்தனர்.

"ரஷ்யாவை ஒரு ஐரோப்பிய சக்தியாக பீட்டர் மாற்றினாரென்றால், அதை ஒரு வல்லரசாக கேத்தரைன் ஆக்கினார்."

# 15. பெருந்தேர்வாளர் பிரடரிக் வில்லியம்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய அரசியலில் பிரான்ஸ், ஸ்வீடன் ஆகிய நாடுகளின் மேலாதிக்கம் மறைந்து பிரஷ்யாவும் ரஷ்யாவும் முன்னணிக்கு வந்தன. பிரஷ்யாவின் எழுச்சிக்குக் காரணமாக இருந்தது அதை ஆண்ட கோஹன் சோலன் (Hohen Zollern) வம்சமாகும். இந்த வம்சத்தின் ஆட்சியில் தான் பிரஷ்யா ஐரோப்பாவிலேயே தலைசிறந்த படை வலிமை பெற்ற நாடாக விளங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மனி ஐக்கியமடைந்தது. இந்த பிரஷ்யாவின் தலைமையின் கீழ்தான் பிரஷ்யாவின் பெருமையும், புகழும் பெருந்தேர்வாளர் வில்லியம் காலத்தில் உயர்ந்தது. மகாபிரடரிக் காலத்தில் உன்னத நிலையை அடைந்தது.

## பிரஷ்யாவின் வளர்ச்சி:

புனித ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய பிராண்டன் பர்க் என்ற தேர்வாளர் அரசிலிருந்து தான் நவீன கால பிரஷ்யா உருவாகியது. இன்றைய பெர்லின் நகரை மையமாகக் கொண்டு கிழக்கிலும், மேற்கிலும் சுமார் நூறு மைல்கள் வரை விரிந்து கிடந்தது பிராண்டன்பர்க். இந்த முக்கியமான அரசை 1415-ல் விலை கொடுத்து வாங்கினார் பிரடரிக் என்ற நூரம்பர்க் சிற்றரசர். இதனால் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்று 'பிராண்டன்பர்க் தேர்வாளர்' ஆனார் புரட்டஸ்தாந்து புரட்சி ஏற்பட்ட போது லூதரின் சமயத்தைப் பின்பற்றினார் பிராண்டன்பர்க் தேர்வாளர். எனவே போப்பாண்டவரின் தலையீடுகள் இல்லாமல் இந்த சிற்றரசு வளர்ந்தது.

அப்போது அதிர்ஷ்டவசமாக நடந்த இரண்டு எதிர்பாராத நிகழ்ச்சிகள் பிராண்டன்பர்க்கின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. முப்பதாண்டுப்போர் தொடங்குவதற்கு முன்பு ஜான்சிஸ்மாண்ட் என்பவர் பிராண்ட்பர்க்கை ஆண்டு வந்தார். இவர் கிளிவ் (Cleves) அரசு கோமகனின் சகோதரியை மணந்திருந்தார். 1609-ல் கிளிவ் கோமகன் வாரிசின்றி இறக்கவே கிளிவ் ஆட்சிப்பகுதியை பிராண்டன் பர்க்குடன் இணைத்துக் கொண்டார் ஜாண்சிஸ்மாண்ட். 1618-ல் போலந்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிழக்கு பிரஷ்ய அரசை ஆண்டு கொண்டிருந்த இவருடைய உறவினர் ஒருவர் வாரிசின்றி இறந்துவிடவே அப்பகுதியும் இவருக்குக் கிடைத்தது. 1640-ம் ஆண்டு பிராண்டன்பர்க் தேர்வாளராக பிரடரிக் வில்லியம் என்பவர் பதவியேற்றதிலிருந்து பிரஷ்யாவின் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது.

## பிராண்டன்பர்க் தேர்வாளராக பிரடரிக் வில்லியம்:

1618-ல் தொடங்கிய முப்பதாண்டுப் போர் பிராண்டன்பர்க்கையும் வெகுவாகப் பாதித்தது. அப்போது பிராண்டன் பர்க் தேர்வாளராக இருந்தவர் ஜார்ஜ்வில்லியம் (1619-1640) என்பவராவார். இவர் மிகவும் திறமையற்றவர். எனவேதான் கத்தோலிக்கப் படையின் தாக்குதல் கட்கு ஆளாகி பிராண்டன்பர்க் பெருந்துன்பமடைந்தது. ஜெர்மனியின் வேறு எந்தப்பகுதியும் இதைப்போல அக்காலத்தில் கொடுந்துன்பத்துக்காளாகவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில்தான் தந்தை இறந்த பின் 1640-ல் பிராண்டன்பர்க் தேர்வாளராகப் பதவியேற்றார் பிரடரிக்வில்லியம். இவர்தான் வரலாற்றில் 'பெருந்தேர்வாளர்' என்று வழங்கப்படுகிறார். இவர் படைத்துறையிலும், நிர்வாகத்திலும், ராஜதந்திரத்திலும் ஆற்றல் கொண்டவர். நவீன பிரஷ்யாவின் பெருமையை உண்மையில் நிறுவிய தலைவர்களுள் இவர் ஒருவராவார். நாட்டின் நன்மையில் தீவிரமான பற்றுதலும், அதன் பணியில் தம்மையும் பிறரையும் தொடர்ந்து ஈடுபடுத்துவதில் முனைந்தவராகவும் இருந்தார். படை வலிமையின் அடிப்படையில் கட்டுப்பாடுகள் அற்ற ஒரு பலமான மத்திய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்பதும், ஆக்ரமிப்புப் போர்களின் மூலம் நாடுகளைப் பிடித்து தன் நாட்டின் எல்லைகளை விரிவடையச் செய்ய வேண்டுமென்பதும் இவரது நோக்கமாகும்.

## உள்நாட்டுக் கொள்கை: Internal Policy

உள்நாட்டுக் கொள்கையை பொறுத்தவரையில் தனது அதிகாரத்தை வலிமைப்படுத்திக் கொண்டு தனது வரம்பு கடந்த முடியாட்சியை நிறுவ வேண்டுமென்பதுதான் பிரடரிக் வில்லியத்தின் குறிக்கோள் ஆகும். இவரது ஆட்சியின் போது மையப்பகுதியில் பிராண்டன்பர்க், பொமரோனியா பகுதியும், கிழக்கில் பிரஷ்யாவும் மேற்கில் கிளிவ் என்ற பகுதியும் அடங்கியிருந்தன. இந்தபகுதிகளில் தனித்தனியாக டயட் என்ற பிரதிநிதித்துவ சபை இருந்து வந்தது. இந்த தனித்தனி பிரதிநிதி மன்றங்களை ஒழித்து அதன் வாயிலாக நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தவதே இவரது முக்கியக் குறிக்கோளாக இருந்தது. எனவே டயட்டுகளையெல்லாம் கலைத்து ஒரு இணைப்பை ஏற்படுத்தினார் பிரடரிக் வில்லியம். பெர்லினில் எல்லாப் பகுதிகளுக்குமான ஒரே அரசு நிறுவப்பட்டது. தனித்தனிப் படைகள் கலைக்கப்பட்டு ஒரே தேசியப்படை உருவாக்கப்பட்டது. இவ்வாறு வலிமை மிக்க பிராண்டன்பர்க் அரசு உருவாக்கப்பட்டது.

நாட்டை நிர்வாகம் செய்வதற்கு நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஆட்சி அமைப்பைக் கொண்டு வந்தார். அரசரின் நம்பிக்கைக்குரிய திறமைமிக்க அதிகாரிகள் நாட்டின் நிர்வாகப் பொறுப்பில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தான்

பிரஷ்யாவில் ஒரு நல்ல நிர்வாகம் ஏற்படுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்கள். இவரது ஆட்சிக்காலத்தில் பிரபுக்களின் வலிமை ஒடுக்கப் பட்டது. ஆனாலும் சமுதாயத்தில் அவர்கள் ஒரு முக்கியப் பிரிவினராகக் கருதப்பட்டனர்.

பிரடரிக்வில்லியம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார். வெளி நாடுகளிலிருந்து தொழில் துறை வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, கம்பளி, கண்ணாடி, நெசவு போன்ற தொழில்கள் துவங்கப்பட்டன. இச்சமயத்தில் தான் பதினான்காம் லூயி நாண்டீஸ் ஆணையை ரத்து செய்து ஹுகுனோக்கள் என்ற பிரெஞ்சுப் புரட்டஸ்தாந்துகளை கொடுமைப் படுத்தினார். எனவே அவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். ஆனால் பிரெடரிக் வில்லியம் பிரஷ்யாவில் அவர்களை வரவேற்றார். 1685-ல் இதற்காகவே பாட்ஸ்டாம் ஆணையை வெளியிட்டு (Edict of Potsdam) சுமார் 20,000 ஹுகுனோக்களை பெர்லினுக்கருகில் குடியமர்த்தினார். பல துறைகளிலும் வல்லுநர்களான ஹுகுனோக்களின் உதவியுடன்தான் பல தொழில்களைப் பிரஷ்யாவில் துவங்கினார் இந்த மகாஎலெக்டர். இதனால் தொழில் மற்றும் வியாபாரத் துறைகளில் மக்கள் புதிய அறிவைப் பெற்றார்கள்.

இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் பெர்லின் நகரம் பிரபலமடைந்தது. சுமார் இருபதாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட பெர்லின் நகரத்தில் சிறப்பான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டன. நகரம் அழகுபடுத்தப் பட்டது. செல்வச்செருக்கு மிக்க நகரமாகக் காணப்பட்டது. பிரடரிக் வில்லியம் காலத்தில் விவசாயம் வளர்ச்சியடைந்தது. பல கால்வாய்களை வெட்டினார். ஓடர் நதியையும் (Order), எல்ப் (Elbe) நதியையும் இணைக்கும் 'பிரடரிக் வில்லியம் கால்வாய்' மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும். மகா எலக்டர் பிரடரிக் வில்லியம் தனது ஆட்சிக் காலத்தில் சமயப் பொறைக் கொள்கையை பின்பற்றினார். எல்லா மதத்தினருக்கும் சமய வழிபாட்டுரிமையை அளித்தார்.

## வெளிநாட்டுக் கொள்கை: Foreigh Policy

மகா எலக்டர் பிரடரிக் வில்லியம் அரியணை ஏறியவுடன் பிராண்டன்பர்க்கின் எல்லைகளை விரிவடையச் செய்வதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டார். தனது படை பலத்தைக் காட்டிலும் அரசியல் தந்திரத்தையே அதிகமாகப் பயன்படுத்தினார். முப்பதாண்டுப் போரின் முடிவில் ஏற்பட்ட வெஸ்ட்பேலியா சமாதானத்தின்படி கிழக்கு பொமரேனியா, மாக்டிபார்க், ஹால்பர்ஸ்டாட், மின்டன், கேமின் (East Pomerania, Magdeburg, Halberstadt, Minden, Camin) ஆகிய பகுதிகளை பிராண்டன்பர்க் பெற்றது. இவ்வாறு பிராண்டன்பர்க் அரசு விரிவடைந்தது.

ஸ்வீடனுக்கும் போலந்துக்குமிடையே 1655-56-ல் போர்கள் நடைபெற்றன. போரில் கட்சி விட்டு கட்சி மாறி பல தந்திரங்களைச் செய்து கிழக்கு பிரஷ்யாவின் மீது போலந்து மன்னருக்கு இருந்த மேலாதிக்கத்தை நீக்கி தனக்கே முழு உரிமையாக்கிக் கொண்டார். 1660-ல் ஸ்வீடன், போலந்து, பிராண்டன்பர்க் ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட ஒலிவா உடன்படிக்கைப் படி (Treaty of Oliva) கிழக்கு பிரஷ்யா மீது பிராண்டன்பர்க்கின் ஆதிக்கம் போலந்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1672-78-ல் நடந்த டச்சுப்போரில் டச்சுக் குடியரசுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டார். பிரான்சுக்கு ஆதரவாகப் போரிட்ட ஸ்வீடனின் படைகளை 1675-ல் பெகர்பெலின் (Fehrbellin) என்ற போரில் முறியடித்தார். இந்த வெற்றிதான் இவருக்கு 'மகாஎலக்டர்' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது.

## மதிப்பீடு:

ஹோகன்சோலன் வம்ச எழுச்சியில் பிரடரிக் வில்லியத்திற்கு பெரும் பங்கு உண்டு. தனியாகச் சிதறிக்கிடந்த மூன்று பகுதிகளை ஒன்று சேர்த்து ஒரே அரசாக்கினார். நாட்டில் இருந்த ஒழுங்கற்ற படைகளைக் கலைத்து திறமையான நிலையான படை ஒன்றை உருவாக்கினார். வலிமைமிக்க கப்பற்படையும் இவரால் உருவாக்கப்பட்டது. நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான சீரான நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினார். பிற்காலத்தில் ஒரு 'வலிமையான பிரஷ்யா' உருவாவதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தவர் மகா எலக்டர் பிரடரிக் வில்லியம். இவருக்குப் பின் இவரது மகன் மூன்றாம் பிரடரிக் 1688-ல் பிராண்டன்பர்க் தேர்வாளர் ஆனார். இதுவரை பிராண்டன்பர்க்கை ஆண்டவர்கள், கோமகன் என்றும் தேர்வாளர் என்றுமே அழைக்கப்பட்டனர். ஆனால் முதலாம் பிரடரிக் எப்படியாவது 'அரசர்' என்ற பட்டத்தைப் பெற வேண்டும் என்று ஆவல் கொண்டார். அப்போது நடந்து கொண்டிருந்த ஸ்பானிய வாரிசுரிமைப் போரில் பிரான்சுக்கெதிராக பேரரசர் லியோபோல்டுக்கு உதவி செய்தார். அதற்கு ஈடாக 'பிரஷ்யாவின் அரசராக' இவரை பேரரசர் ஏற்றுக் கொண்டார். 1701-ல் மூன்றாம் பிரடரிக், 'பிரஷ்ய மன்னர் முதலாம் பிரடரிக்' என்று முடிசூட்டிக் கொண்டார். 1713-ம் வருட உட்ரக்ட் உடன்படிக்கையின்படி எல்லா ஐரோப்பிய அரசுகளும் இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டன. நாளடைவில் பிரஷ்யா என்பது பிராண்டன்பர்க், பிரஷ்யா என்ற இரு அரசுகளையும் குறிப்பதாகவே அமைந்தது.

# 16. மகா பிரடரிக்

## *பிரஷ்யாவின் எழுச்சி*

ஸ்விட்சர்லாந்துக்கு வடக்கில் உள்ள ஸோல்லன் குன்றின் மேலுள்ள கோட்டையை, ஹோஹன்ஸோல்லன்கள் ஆட்சி செய்து வந்தனர். அக்குடும்ப, ஆட்சியாளருக்கு வாரிசில்லாத தால், பிரான்டென்பர்க்-ன் எலக்டர் (Elector) வசம், கி.பி. 1611-ல், ஆட்சிப் பொறுப்பு தரப்பட்டது. கி.பி. 1614-ல் கிளீவ்ஸ், ஜுலிக் மற்றும் பெர்க்-ன் பிரபுவின் சகோதரி மகளை பிரான்டைன்பர்க்-ன் எல்க்டர் மணந்தார். பின்னர் கிழக்கு பிரஷ்யாவின் டியூக்-ன் மகளையும் எலக்டர் மணந்தார். அந்த டியூக்கிற்கும், பிரபுவிற்கும் வாரிசு இல்லாததால், அப்பகுதிகளும் எலக்டர் வசம் வந்தன. இவ்வாறாக பிரஷ்யா நாடு உருவாயிற்று.

## *எலக்டர் ஃபிரடரிக் வில்லியம்(1640-1688)*

நவீன பிரஷ்யாவை உருவாக்கியவர் என எலக்டர் பிரடரிக் வில்லியம் (Frederick William the Elector)-ஐ குறிப்பிடுகின்றனர். முப்பதாண்டுப் போரில் கலந்து கொண்ட அவர், கோனிஸ்பர்க் உடன்படிக்கை (1656), ஒலிவியா உடன்படிக்கை (1660) ஆகியவற்றிற்குப் பிறகு நாட்டை சிறப்பாக ஆட்சி செய்தார்

## *முதலாம் ஃபிரடரிக் (1688-1713)*

எலக்டர் ஃபிரடரிக் வில்லியமின் மகனான பிரடரிக், 1688-ல் எலக்டர் ஆனார். 1701-ல் புனித ரோமானியப் பேரரசர் முதலாம் லியோபால்ட்-இடம் அரசர் பட்டம் பெற்ற ஃபிரடரிக், அதுமுதல் முதலாம் பிரடரிக் எனப்பட்டார். பிரஷ்யாவின் முதல் அரசர் அவரே.

## முதலாம் ஃபிரடரிக் வில்லியம்-(1713-40)

முதலாம் ஃபிரடரிக்கைத் தொடர்ந்து அவரது மகனான முதலாம் ஃபிரடரிக் வில்லியம் ஆட்சிக்கு வந்தார். "நாங்கள் அரசராகவும் தலைவராகவும் இருப்போம், நாங்கள் விரும்புவதை செய்வோம்" என்று அவர் சொன்னார். பிரஷ்ய படை திரட்டுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்த அவரை, சார்ஜண்ட் அரசர் என மக்கள் அழைத்தனர்.

## மகா ஃபிரடரிக் (இரண்டாம் ஃபிரடரிக்-1740-86)

தந்தை (முதலாம் ஃபிரடரிக் வில்லியம்,யின் எதிர் பார்ப்பை விட அதிகமாக, அனைவரும் வியக்கும் வகையில், ஐரோப்பாவிலேயே அவரைப் போன்ற சிறந்த தளபதி யாரும் அப்பொழுது இல்லை என்று புகழப்படும் அளவிற்கு சிறப்பான வெற்றிகளைப் பெற்றார் மகா ஃபிரடரிக் (Frederick the Great)

தன் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியை ஆஸ்திரியாவுடனான போர்களிலும், பிற்பகுதியை நாட்டின் முன்னேற்றத் திற்கும் ஃபிரடரிக் செலவிட்டார்.

### ஃபிரடரிக்கின் அயல்நாட்டுக் கொள்கை

பல போர்களிலும் ராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு, பிரஷ்யாவின் எல்லைகளை மகா ஃபிரடரிக் விரிவுபடுத்தினார்.

### i) ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர்(1740-48)

பிரஷ்யாவின் எல்லைகளை விரிவுபடுத்த மகா ஃபிரடரிக் முயன்றபோது, புனித ரோமானியப் பேரரசரும் ஹாப்ஸ்பர்க் பகுதியின் உரிமையாளருமான ஆறாம் சார்லஸ், ஆண் வாரிசின்றி, 1740-ல் இறந்தார். தான் இறப்பதற்கு முன்பே, தன் மகள் மரிய தெரசாவை வாரிசாக ஏற்குமாறு ஐரோப்பிய அரசர்களிடம் அவர் சம்மதம் பெற்றிருந்தார். அதற்கு பேரரசரின் கட்டளை (Pragmatic sanction) என்று பெயர். எனினும் ஆறாம் சார்லஸ் இறந்ததும் வாரிசுரிமைப் போர் தொடங்கியது. அதுவே ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் எனப்பட்டது.

அப்போரில் பிரஷ்யாவுக்கு ஆதரவாக பிரான்சும் பவேரியாவும், ஆஸ்திரியா (மரிய தெரசா) விற்கு ஆதரவாக இங்கிலாந்தும் ஹங்கேரியும் போரிலிறங்கின. பிரான்சு மற்றும் இங்கிலாந்தின் காலனிகளுக்கும் போர் பரவியது. எட்டாண்டுகளுக்குப் பிறகு, *1748*-ல் எய்-லா-ஷபேல் உடன்படிக்கையின் படி போர் முடிவுற்றது. அதன்படி, மரிய தெரசா ஆஸ்திரிய அரசியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்; சைலீஷியாவை ஃபிரடரிக்கே வைத்துக் கொள்ளலாம் என முடிவாயிற்று.

## ii) ஏழாண்டுப் போர் *(1756-63)*

எவ்வாறேனும் சைலீஷியாவை திரும்பப் பெற வேண்டும் என்ற முயற்சியில் மரிய தெரசா இறங்கியதால், மீண்டும் போர் தொடங்கியது. அதுவே ஏழாண்டுப் போர் *(1756-63)* எனப்பட்டது.

அப்போரில் ஐரோப்பிய வரலாற்றில் முதல் முறையாக, ஆஸ்திரிய தூதர் கானிட்ஸ்ட்-ன் முயற்சியால் ஆஸ்திரியாவுடன் பிரான்ஸ் இணைந்தது. ரஷ்யாவும், சாக்சனியும் கூட ஆஸ்திரியாவிற்கு உதவின. பிரான்சைத் தோற்கடிப்பதற்காக இங்கிலாந்துடன் பிரஷ்யா சேர்ந்தது. இதை வெல்திறப் புரட்சி (Diplomatic Revolution) என்றனர்.

பிரான்சும் இங்கிலாந்தும் மீண்டும் போரில் ஈடுபட்டதால், அவைகளின் காலனிகளுக்கும் (இந்தியா உட்பட) போர் பரவியது. போரின் ஆரம்பத்தில் *(1757-ல்)* பிரெஞ்சுப் படையை ராஸ்பேக் (Rossbach) லும், ஆஸ்திரியப் படையை லூத்தன் (Louthen)-லும் ஃபிரடரிக் தோற்கடித்தார். ஆனால், *1761*-ல் ஆஸ்திரிய மற்றும் ரஷ்யப் படைகள் பெர்லின்-ஐக் கைப்பற்றின. எனவே போரின் பிற்பகுதியில் தற்காப்பு நிலையிலேயே ஃபிரடரிக் இருந்தார். இதற்கிடையில், ரஷ்யப் பேரரசி எலிசபெத் இறந்துவிடவே *(1762)* ஆட்சிக்கு வந்த கேத்தரைன் போரிலிருந்து பின்வாங்கினார்.

*1763*-ன் பாரிஸ் உடன்படிக்கையின்படி ஏழாண்டுப் போர் முடிவுற்றது. அதைத் தொடர்ந்து ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஹியூபர்ட்ஸ்பர்க் (Hubertsburg) உடன்படிக்கை செய்து கொண்டன. அதன் மூலம், சைலீஷியாவை ஃபிரடரிக்கே வைத்துக் கொண்டார். ஆனால், மரிய தெரசாவிற்கு நஷ்ட

ஈடாக, போலந்துப் பிரிவினையில், கிழக்கு கேலிஷியாவும், லொடமீரியாவும் அவருக்குத் தரப்பட்டன.

### iii) போலந்து பிரிவினை *(1772)*

போலந்தின் அரசர் இறந்ததும், அந்நாட்டை ஆக்கிரமிக்க ரஷ்ய ட்சாரினா கேத்தரைன், ஒரு படையை அனுப்பினார். இச்சிக்கலில் ஆஸ்திரியா தலையிடாமல் இருக்கச் செய்ய, போலந்தின் ஒரு பகுதியை மரிய தெரசாவிற்குத் தருவதாக கேத்தரைன் கூறியதை, மரிய தெரசா ஒப்புக் கொண்டார்.

போலந்து பிரிவினையை, ஐரோப்பிய நாடுகள் எதிர்த்தன. எனினும் ரஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் போலந்தை பங்கிட்டுக் கொண்டன. ஃபிரடரிக்-கிற்கு மேற்கு பிரஷ்யா கிடைத்தது. இதனால் பால்டிக் கரை வரை பிரஷ்யாவின் எல்லை பரவியது.

### iv) பவேரியா

*1777*-ல் ப்வேரிய எலக்டர் இறந்ததும், பலாட்டினேட்-ன் எலக்டர் சார்லஸ் தியோடர் பவேரியாவிற்கு வாரிசானார். ஆனால் புனித ரோமானியப் பேரரசான இரண்டாம் ஜோசப், பவேரியாவை தன் பேரரசுடன் இணைத்துக் கொள்ள விரும்பினார். சார்லஸ் தியோடரின் உரிமையை ஃபிரடரிக் ஆதரித்தார். இதனால் தன் முயற்சி தோல்வி அடையவே, பவேரியாவிற்கு பதிலாக ஆஸ்திரிய நெதர்லாந்தை மாற்றிக்கொள்ள இரண்டாம் ஜோசப் முன்வந்தார். ஆனால் ஹாப்ஸ்பர்க் நிலப்பகுதிகள் ஒருங்கிணைவது தனக்கு ஆபத்து என ஃபிரடரிக் நினைத்தார். ஃபிரடரிக்கின் பிடிவாதத்தால் தன் திட்டத்தை ஜோசப் கைவிட்டார்.

### v) இளவரசர் கழகம் *(1785)*

ஜெர்மனியில் இளவரசர்கள் கழகத்தை (League of Princes) 1785-ல் ஃபிரடரிக் உருவாக்கினார். ஜெர்மானிய இளவரசர்களின் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதே அக்கழகத்தின் முக்கிய நோக்கம். ஆனால் உண்மையில், ஆஸ்திரியாவின் ஆக்கிரமிப்புப் போக்கை தடை செய்யவே அக்கழகம் உருவாக்கப்பட்டது.

## ஃபிரடரிக்கின் உள்நாட்டுக் கொள்கை

அயல்நாடுகளுடனான உறவில் நேர்மையைப் பற்றி கவலைப்படாத ஃபிரடரிக், தன் குடிமக்களுக்கு நேர்மையான ஆட்சியை அளித்தார். "என் கடமையே என் ஒரே கடவுள்; நானே அரசின் முதல் பணியாள்" என்று அவர் கூறிக்கொண்டார்.

ஒழுங்கான விதிமுறைகளுடன் நாட்டின் பொதுச் சட்டத்தை தொகுத்தார். தன் ஆட்சியின் கீழுள்ள எல்லா அரசாங்க நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தி, ஒவ்வொரு துறையிலும் அனுபவம் மிக்க அதிகாரிகளை நியமித்தார். காடுகளை விளைநிலங்களாக மாற்றி வேளாண்மையைப் பெருக்கினார். கால்நடைகள், விதைகள், கடன் உதவி ஆகியவற்றை நேரடியாக தானே குடியானவர்களுக்கு அளித்தார்.

பட்டு, நார்பட்டு, வெல்வெட் ஆகியன உற்பத்தி செய்ய வகை செய்தார். இரும்பு மற்றும் நிலக்கரிச் சுரங்கங்கள் தோண்டப்பட்டன. கலை, கல்வி, இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு அவர் பாடுபட்டார். பிரெஞ்சுப் பழக்க வழக்கங்களைப் பெரிதும் விரும்பிய அவர், பிரெஞ்சு மொழியையே தன் அரசவை மொழியாக்கினார்.

பிரான்சிலிருந்து வெளியேறிய ஹியூகோனாக்-கள் பிரஷ்யாவில் குடியேறினர். அவர்களுக்கு ஆதரவளித்த ஃபிரடரிக், அவர்களது சமய உணர்வுகளுக்கு மதிப்பளித்தார். பிரஷ்யாவில் குடியேறிய துருக்கியர்களுக்கு மசூதிகளை கட்டித் தருவதாகக் கூறினார். பிரான்சின் தத்துவ மேதை வால்டேர், ஃபிரடரிக்கின் நெருங்கிய நண்பராக சிலகாலம் பெர்லினில் தங்கி இருந்தார்.

### மதிப்பீடு

பதினெட்டாம் நூற்றாண்டின் அறிவு மிக்க வல்லரசர்களுள் ஃபிரடரிக்கும் ஒருவர். சட்டம் - ஒழுங்கு பாதுகாப்பும், எல்லா சமயத்தினரிடமும் அன்பாக நடந்து கொண்டதும் அவர் புகழை உயர்த்தின. இலக்கியத்திலும் இசையிலும் ஈடுபாடு கொண்டவராக அவர் இருந்தார். அவரது பணிக்காக, அவரது வாழ்நாளிலேயே பிரஷ்ய மக்கள் அவரை மகா ஃபிரடரிக் என்றழைத்தனர்.

ஐரோப்பிய வல்லரசுகளில் சிறப்பானதாக பிரஷ்யாவை ஆக்கிய மகா ஃபிரடரிக், 1786-ல் இறந்தார்.

# 17. மரிய தரசா

ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் அரசரும், புனித ரோமானியப் பேரரசருமான ஆறாம் சார்லஸ் (1711-1740) 1740-அக்டோபர் மாதம் இறந்தபின் அவரது மகளான மரியதரசா ஆஸ்திரியாவின் அரியணை ஏறினார். ஐரோப்பிய வரலாற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தவர் மரியதரசா. ஹாப்ஸ்பர்க் குடும்பத்தில் தோன்றிய அரசர்களிலேயே சிறந்த நாட்டுப்பற்றும், மனஉறுதியும் மிக்கவர். பெருந்தன்மையான குணங்களைக் கொண்டிருந்தார். அழகு, சமயத்தில் ஈடுபாடு, நாட்டுப்பற்று, மனஉறுதி இவை அனைத்தும் இருந்தும் இறுதியில் தோல்வியடைந்தார் மரியதரசா.

## மரியதரசா அரியணை ஏறுதல்:

1711-ம் ஆண்டு புனித ரோமானியப் பேரரசராகவும் ஆஸ்திரிய அரசராகவும் அரியணை ஏறினார் ஆறாம் சார்லஸ். இவருக்கு ஆண்வாரிசு இல்லை. அவரது ஒரே மகளான மரியதரசா எல்லாவகையிலும் பட்டம் பெறத் தகுதி உள்ளவராகக் கருதப்பட்டார். எனவே தமக்குப்பிறகு ஆஸ்திரியப் பேரரசை தனது மகள் மரியதரசாவே ஆளவேண்டும் என்று விரும்பினார் ஆறாம் சார்லஸ். அத்துடன் அவரது கணவரான லொரைன் நாட்டு பிரான்சிஸ் ஸ்டீபனுக்கு பேரரசர் பட்டம் கிடைக்க வேண்டும் என்பதும் அவர் வாழ்வின் குறிக்கோளாக இருந்தது.

எனவே தாம் இறப்பதற்கு முன்பே 'பேரரசரின் தனிக்கட்டளை' என்றழைக்கப்படும் (Paragmatic Sanction) ஒரு ஆணையைத் தயாரித்து, தம் மகளின் உரிமைகளை ஏற்றுக் கொள்ளுவதற்காகத் தம் நாட்டின் பல பகுதிகளின் சம்மதத்தையும், பெரும்பான்மையான ஐரோப்பிய அரசுகளின் கையொப்பத் தினைப் பெற்றார். வாரிசுரிமைப் பிரச்சனையைச் சிக்கலின்றித் தீர்த்துவிட்ட மனநிறைவுடன் 1740, அக்டோபர் மாதம் காலமானார். அதன்பின் 1740-ல் மரியதரசா ஆஸ்திரிய அரியணையில் ஏறினார்.

## மரியதரசாவின் வெளிநாட்டுக் கொள்கை:

மரியதரசா அரியணை ஏறியவுடன் ஆறாம் சார்லஸின் தனிக்கட்டளை ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்ட பவேரியா, ஸ்பெயின், சார்டீனியா, சாக்சனி போன்ற நாடுகளே ஆஸ்திரியப் பேரரசின் சில பகுதிகள் தங்களுக்குச் சேர வேண்டுமென்று உரிமை கொண்டாட ஆரம்பித்தன. ஆனால் இவற்றையெல்லாம் முந்திக்கொண்டு பிரஷ்ய அரசர் மகாபிரடரிக் ஆஸ்திரியாவில் ஓடர் நதியின் மேற்குப்பகுதியிலுள்ள வளம் பொருந்திய பகுதியான சைலீஷியாவை வன்முறையில் தாக்கிக் கைப்பற்றிக் கொண்டார். இதன் விளைவாக ஏற்பட்டது தான் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர்(1740-48) ஆகும்.

1. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர், 1740-1748
2. ராஜதந்திரப் புரட்சி, 1748-1756
3. ஏழாண்டுப் போர், 1756-1763
4. முதலாவது போலந்து பிரிவினை, 1772.

(மேற்கண்ட நான்கு பிரிவுகளையும் மாணவர்கள் அப்படியே 'மகாபிரடரிக்' பாடத்திலிருந்து படித்துக் கொள்ளலாம்.)

## மரியதரசாவின் உள்நாட்டுக் கொள்கை:

மரியதரசாவின் ஆட்சியில் ஆஸ்திரியா புகழ்பெற்று விளங்கியது. உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் இவருக்கு உறுதுணையாக இருந்தவர் அமைச்சர் கௌனிட்ஸ்(Kaunitz) என்பவராவார்.

மரியதரசா அரியணை ஏறியபோது ஆஸ்திரியப் பேரரசு ஒற்றுமையற்று சிறுசிறு பகுதிகளாகச் சிதறிக் கிடந்தது. இங்கிலாந்து, பிரான்சைப்போல ஆஸ்திரியா ஒரு தேசிய அரசாகத் திகழவில்லை. ஏனெனில் ஆஸ்திரியப் பேரரசில், ஜெர்மன், ஸ்லோவாக், செக், மாக்யர்கள்(Germans, Slovak, Czech, Magyar)போன்ற பல்வேறு இன மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர் ஆஸ்திரியப் பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் அந்தந்தப் பகுதிகளின் மரபுகள், பழக்க வழக்கங்களோடு ஒத்த பல்வேறு நிர்வாக முறைகள் அமலில் இருந்தன. அரியணை ஏறியது முதல் மரியதரசாவின் நோக்கம் சிதறுண்டு கிடக்கும் இந்த அரசுகளை ஒன்றுபடுத்தி ஆஸ்திரியாவை ஒரு வலிமை பொருந்திய நாடாக ஆக்கவேண்டும் என்பதே ஆகும்.

மரியதரசா பழமையில் அதிகப்பற்றுடையவர். கத்தோலிக்க சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். ஆயினும் அரசரது ஆதிக்கத்துக்கு அடங்க மறுத்த ஜெசூட்டுகளை அவர் தடைசெய்து தண்டித்தார். புதிய பிரெஞ்சு தத்துவ அறிஞர்களின் கருத்துக்களையும், சீர்திருத்த மாறுதல்களையும் இவர் விரும்பவில்லை. தனது ஆதிக்கம் பிரபுக்களின் ஆதரவின்றி நிலைக்காது என்று கருதியதால் பிரபுக்களின் நலனுக்குப் புறம்பான எதையும் இவர் செய்யத் துணியவில்லை. எனவே இவரது ஆட்சியில் தீவிர முற்போக்குத் திட்டங்கள் ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரும், ஏழாண்டுப் போரும் ஆஸ்திரியாவின் பலவீனத்தை நன்கு எடுத்துக் காட்டின. இந்தப் பலவீனத்தைக் களைந்து தனது நாட்டை மேம்படுத்தவேண்டுமென்று கருதிய அரசியாரும் அவரது திறமைமிக்க அமைச்சர் கௌனிட்சும் நிர்வாகத்தில் கீழ்க்கண்ட பல மாற்றங்களைச் செய்தனர்.

அதிகாரம் முழுவதும் தன்கையிலே குவித்து வைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் ஆஸ்திரியப் பேரரசின் பல மாநிலங்களில் இயங்கி வந்த 'டயட்'(Diet) சபைகள் கலைக்கப்பட்டன. நாட்டின் நீதி மற்றும் நிர்வாகத்துறையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார் மரியதரசா. 1753-ல் வீயன்னா நகரில் நீதி மன்றம் ஒன்றை அமைத்தார். சட்டத்தொகுப்பு ஒன்றைத் தயார் செய்ய சட்டவல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பல வேறுபாடுகளைக் கொண்டிருந்த மாநிலப்படைகள் கலைக்கப்பட்டது. மத்திய அரசாங்கமே படை திரட்டும் பொறுப்பையும் படைகளைக் கண்காணிக்கும் பொறுப்பையும் ஏற்றது.

நல்ல குடிமக்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நாட்டில் கல்விமுறை திருத்தியமைக்கப்பட்டது. லத்தீன் மொழிக்குப் பதிலாக ஜெர்மன் மொழியே அரசாங்க மொழியாக்கப்பட்டது. வீயன்னா பல்கலைக்கழகம் திருத்தி அமைக்கப்பட்டது. நாட்டில் பல பள்ளிகள் நிறுவப்பட்டன. விவசாயத்தை ஊக்குவிக்க 'விவசாயக் கழகம்' ஒன்று அமைக்கப்பட்டது. சாலைகள், கால்வாய்கள் முதலியவற்றை அமைத்து போக்குவரத்து வசதியைப் பெருக்கினார் மரியதரசா.

## மதிப்பீடு:

மரியதரசா ஒளியூட்டும் வல்லரசர்களில்(Enlightened Destpots)ஒருவராக கருதப்படுகிறார். பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பரவிக் கொண்டிருந்த 'அறிவு வளர்ச்சி இயக்கத்தில்' இவர் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். தனது வெளி உறவுக் கொள்கையில் தோல்வியே அடைந்தார். மகாபிரடரிக்கிடம் இழந்த சைலீஷியாவை மரியதரசாவால் மீட்கவே முடியவில்லை. 1772-ல் போலந்து முதல் பிரிவினையில் பங்கு கொள்ள முதலில் தயங்கினாலும் பிறகு சேர்ந்து கொண்டார். 1780-ம் ஆண்டு காலமானார் மரியதரசா. அதன்பின் அவரது மகன் இரண்டாம் ஜோசப் அரியணையேறினார்.

# 18. இரண்டாம் ஜோசப்

புனித ரோமானியப் பேரரசரும், ஹாப்ஸ்பர்க் பகுதிகளின் உரிமையாளருமான ஆறாம் சார்லஸ், 1740-ல், இறந்தார். ஆண் வாரிசற்ற அவருக்குப் பின் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரின் முடிவில், ஹாப்ஸ்பர்க் பகுதிகளுக்கு மட்டும் (புனித ரோமானியப் பேரரசுக்கு பெண்மணி வாரிசாக முடியாது என்பதால்) ஆறாம் சார்லஸின் மகள் மரிய தெரசா, 1748-ல் வாரிசானார். மரிய தெரசாவின் மூத்த மகனான இரண்டாம் ஜோசப் (Joseph - II), 1765-ல் புனித ரோமானியப் பேரரசானார். 1780-ல் மரிய தெரசா இறந்ததும் ஹாப்ஸ்பர்க் பகுதிகளுக்கும் உரிமையாளரானார் ஜோசப்.

பதினெட்டாம் நூற்றாண்டின் ஒளி பொருந்திய வல்லாட்சியாளரான இரண்டாம் ஜோசப்பின் சாதனைகளை உள்நாட்டுக் கொள்கை, அயல் நாட்டுக் கொள்கை எனப் பிரித்து அறிவோம்.

## உள்நாட்டுக் கொள்கை

நாட்டிலிருந்த பிளவுபடுத்தும் சக்திகளை ஒடுக்கிய இரண்டாம் ஜோசப், நிர்வாக, சமூக, பொருளாதார மற்றும் சமயச் சீர்திருத்தங்கள் பலவற்றைக் கொண்டுவந்தார்.

### i) நிர்வாகச் சீர்திருத்தங்கள்

ஹாப்ஸ்பர்க்கின் உடைமைகளான ஆஸ்திரியா, ஹங்கேரி, ஆஸ்திரிய நெதர்லாந்து, பொஹீமியா, இத்தாலியப் பகுதிகள்

ஆகியன ஐரோப்பாவில் சிதறிக் கிடந்தன. அவற்றை இணைத்து, ஒன்றுபட்ட நாட்டை உருவாக்க இரண்டாம் ஜோசப் முயற்சித்தார். தன் நிலப்பகுதிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அவற்றை 13 மாநிலங்களாகப் பிரித்து, ஆளுநர்களைக் கொண்டு நிர்வகிக்கச் செய்தார்.

ஜெர்மானிய மொழியை அலுவலக மொழியாக்கினார். உரிமையியல் மற்றும் குற்றவியல் சட்டங்களைத் தொகுத்து, அவற்றைப் பின்பற்றுமாறு மக்களை வற்புறுத்தினார். நீதிமன்றங்களை மாற்றியமைத்தார். வியன்னா நீதிமன்றத்தை தலைமையகமாகக் கொண்டு, படிமுறை கொண்ட முறையீட்டு மன்றங்கள் பலவற்றை அமைத்தார். பிரஷ்ய மாதிரியில் படையைச் சீரமைத்து, குடியானவர்களையும் இராணுவச் சேவை புரியுமாறு கட்டாயப்படுத்தினார். இதனால், படை ஆட்சி முறை (Military Rule) யை அவர் ஏற்படுத்தினார் எனப்படுகிறது.

## ii) சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

நிலமானியக் கடமைகளிலிருந்து பிரபுக்களை விடு வித்ததுடன், அடிமை முறையையும் ஜோசப் ஒழித்தார். பிரபுக்களும், குடியானவர்களும் ஒரே சீராக, நிலத்தின் விளைச்சலில் 13 சதவீதத்தை நிலவரியாக கட்டச் செய்தார். எல்லோருக்கும் இலவச ஆரம்பக் கல்வியை அளிக்க அவர் எண்ணினார். டிரிஸ்டி, ஃபியூம் ஆகிய இடங்களில் துறைமுகத் திட்டங்களை ஜோசப் மேற்கொண்டார். மத்திய தரைக் கடலில் தன்நாட்டின் வாணிபம் வளர்ச்சியடைய பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். ரஷ்யாவுடனும், துருக்கியுடனும் புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்.

## iii) சமயச் சீர்திருந்தங்கள்

சமயக் கொள்கையிலும் தீவிர மாற்றங்களை இரண்டாம் ஜோசப் கொண்டுவந்தார். "கத்தோலிக்கத்திலும் மூட நம்பிக்கைகள் உண்டு, அவை ஒழிக்கப்பட வேண்டும், சமயம்-அரசு இடையே தொடர்பு கூடாது, அரசுக்கு சமயம் கட்டுப்பட்டது, தன் அனுமதியின்றி நாட்டிற்குள் போப்பின் ஆணைகள் (Bulls) நுழையக் கூடாது என அவர் அறிவித்தார்.

பின்னர், தானே பிஷப்புகளை நியமித்தார். திருச்சபைச் சொத்துக்களை பறிமுதல் செய்தார். பல மடங்கள் அழிக்கப்பட்டன. அரசின் பள்ளிகளிலேயே குருக்கள் பயிற்சி பெற வேண்டுமென ஆணையிட்டார். 1781-ல் அவர் வெளியிட்ட சமயப் பொறைக் கட்டளை (Edict of Toleration) சுதந்திரமாக வழிபடுதலையும், சமமான உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகளையும் எல்லோருக்கும் அளித்தது.

## அயல் நாட்டுக் கொள்கை

ஆஸ்திரியாவின் எல்லைகளை (கிழக்கே கருங்கடல் வரையிலும், மேற்கே அட்ரியாடிக் கடல் வரையிலும்) விரிவுபடுத்த ஜோசப் விரும்பினார். பிரஷ்ய மன்னர் மகா ஃபிரடரிக், ரஷ்ய Tsarina கேத்தரைன் மற்றும் தன் தாய் (மரிய தெரசா)உடன் சேர்ந்து போலந்தின் முதல் பிரிவினை (1772) ஏற்பட அவர் காரணமாக இருந்தார். அதன்மூலம், ஆஸ்திரியாவுக்கு கலீஷியா (சிகப்பு ரஷ்யா) கிடைத்தது.

ஐரோப்பாவிலிருந்து துருக்கியரை அடியோடு விரட்டி, கிரேக்கப் பேரரசை மீண்டும் ஏற்படுத்த முயன்ற ரஷ்ய அரசி கேத்தரைன் உடன், 1781-ல், இரண்டாம் ஜோசப் ஓர் உடன்பாடு செய்து கொண்டார். 1786-ல் பால்கன் தீபகற்பத்தின் மீது படையெடுத்த ஜோசப், பெல்கிரேடைக் கைப்பற்றினார்.

பவேரியாவின் எலக்டர் இறந்ததும் (1777), பவேரியாவை தன் பேரரசுடன் இணைத்துக் கொள்ள ஜோசப் விரும்பினார். அதற்கு அவர் செய்த முயற்சிகள் தோல்வியடையவே, ஆஸ்திரிய நெதர்லாந்தைத் தந்து பவேரியாவைப் பெற இரண்டாம் ஜோசப் நினைத்தார். ஆனால் ஹாப்ஸ்பர்க் நிலப்பகுதிகள் ஒருங்கிணைவது தனக்கு ஆபத்து எனக் கருதிய மகா ஃபிரடரிக் அதை எதிர்த்தார். எனவே அவ் வெண்ணத்தையும் ஜோசப் கைவிட்டார்.

## ஜோசப்பின் சீர்திருத்தங்களின் தோல்வி

புது நோக்கம் கொண்ட இரண்டாம் ஜோசப்பின் சீர்திருத்தங்கள், கண்ணியமானவையாகவும் பயன்தரக் கூடியனவாகவும் இருந்தன. ஆனால் அவை மிகவும் நவீனமானதாக இருந்ததை மக்களால் அறிந்து கொள்ள முடியவில்லை.

அவருடைய சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புகள் தோன்றின. கட்டாய ராணுவ சேவையை குடியானவர்கள் எதிர்த்தனர். நிலமானியச் சலுகைகள் பறிப்பை பிரபுக்கள் எதிர்த்தனர்.

மதத்துறையில் ஜோசப்பின் தலையீட்டை குருமார்கள் எதிர்த்தனர். திருச்சபையில் அவர் ஏற்படுத்திய புரட்சிகரமான மாற்றங்கள், மக்களின் சமய உணர்வை புண்படுத்தின. அவரது சீர்திருத்த மனப்பான்மையையும் தேசிய உணர்ச்சியையும் மக்கள் வெறுத்தனர். ஆஸ்திரியப் பேரரசில் ஜெர்மானிய மொழியை அரசு மொழியாக்கியதையும் மக்கள் விரும்பவில்லை. இவ்வாறாக, அவரது சீர்திருத்தங்கள் தோல்வியடைந்தன. பொஹிமியாவிலும், ஹங்கேரியிலும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. கத்தோலிக்க உரிமைகளைக் காக்க பெல்ஜியத்தில் புரட்சி நடைபெற்றது. இவ்வெதிர்ப்புகள், அவரை விரைவில் மரணமடையச் செய்தன.

## மதிப்பீடு

இரண்டாம் ஜோசப்பின் பல திட்டங்கள் தோல்விய டைந்தாலும், அவற்றுள் சில நிலைத்தன. அடிமைகளின் துயரத்தைக் குறைத்ததும், வேளாண்மை, தொழில் ஆகிய துறைகளில் மேற்கொண்ட அவரது சீர்திருத்தங்களும் நீடித்த பயனை அளித்தன. 1790-ல் அவர் இறக்கும் போது, தன் அருகில் இருந்தவர்களிடம் "முற்றுப் பெறாத நல்லெண்ணங் களுடன் தன் வாழ்க்கை முடிந்தது" என்று அவர் கூறினார். தன்னுடைய கல்லறை மீது, "இங்கே இருக்கும் மனிதர் நல்லெண்ணங்கள் கொண்டவர், ஆனால் எதிலும் வெற்றி பெறாதவர்", என எழுதுமாறு ஜோசப் கேட்டுக் கொண்டார். எதேச்சதிகார மன்னர்கள் அனைவரின் முடிவும் அவருடையதைப் போல, சோகமானதாகவே இருந்தது.

# 19. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் ஐரோப்பிய நிலை

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்புள்ள காலம் மன்னராட்சிக்காலம் என்றும், புரட்சிக்குப் பின் உள்ள காலம் மக்களாட்சிக்காலம் என்றும் கூறப்படுகிறது. இந்த இரண்டு காலங்களையும் பிரித்துவைக்கும் எல்லைக் கோடாக பிரெஞ்சுப் புரட்சி விளங்குகிறது. French Revolution is the dividing line between the age of kings and the age the people. புரட்சிக்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் எல்லாமே மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் 'அரசர்களின் தெய்வீக உரிமைக் கொள்கை'ப்படி ஆட்சி செய்தார்கள். மக்களுக்கு அரசாங்கத்தில் எந்தப்பங்கும் கிடையாது. எந்த உரிமைகளும் கிடையாது. ஆனால் பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக ஐரோப்பாவில் பல நாடுகளில் அரசர்களின் ஆட்சி தூக்கி எறியப்பட்டு மக்களாட்சி முறை ஏற்பட்டது. ஜனநாயகக் கருத்துக்களும் தேசியக் கருத்துக்களும் வேகமாகப் பரவின. ஒரு சில நாடுகளில் பழைய அரசர்களே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தாலும் அவர்கள் மக்களின் விருப்பப்படியே ஆட்சி புரிய வேண்டிய நிலை ஏற்பட்டது.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, மதசீர்திருத்தம் ஆகியவைகளின் விளைவாக ஐரோப்பிய அரசியலில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இடைக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட போப்பாண்டவரின் செல்வாக்கும், திருச்சபையின் அதிகாரங்களும் குறைக்கப்பட்டன. இதன் விளைவாக மன்னர்களின் அதிகாரம் உயர்ந்தது. மன்னர்கள் அரசாங்கத்தின் தலைவர்களாகவும், சமயத்தின் தலைவர் களாகவும் மாறினர். பின்னர் தெய்வீக உரிமைக் கோட்பாடும், வல்லாட்சி முறையும் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது. 18-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் பல நாடுகளில் 'ஒளியூட்டும் வல்லாட்சி முறை' (Enlightened Despotism) என்ற முடியாட்சி முறை தோன்றியது.

இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றி, முதலாம் எலிசபெத், பிரான்சில் 14-ம் லூயி, ரஷ்யாவில் மகாபீட்டர், இரண்டாம் காதரின், பிரஷ்யாவில் மகாபிரடரிக், ஆஸ்திரியாவில் மரியதரசா, இரண்டாம் ஜோசப் ஆகியோர்கள் ஒளியூட்டும் வல்லாட்சியாளர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள். நல்லெண்ணம் கொண்ட இந்த அரசர்களிடம் எல்லா அதிகாரங்களும் சேர்ந்ததனால் நன்மைதரும் வகையில் பல மாறுதல் ஏற்பட்டன. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு இந்த ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட பொதுவான நிலை பற்றி இனி காணலாம்.

## பிரஷ்யா (Prussia) :

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரஷ்யாவில் மகாபிரடரிக் (1740-1786) சிறந்த ஆட்சியை நடத்தி வந்தார். இவருடைய ஆட்சி வல்லாட்சியாக விளங்கிய போதிலும் நாட்டு நலனிற்கும், மக்களின் வாழ்க்கைக்கும் ஏற்ற வகையில் ஆட்சியை அமைத்துக் கொண்டார். இங்கு ஆடம்பரங்களும், சடங்குகளும் இல்லை. அரசாங்கத்தில் மன்னர் கடுமையாக உழைக்கும் வேலைக்காரராக இருந்தார். மன்னர் கடினமான வேலைகளைத் தான் மேற்கொண்டதோடு, தன் நாட்டிலுள்ள மக்களையும் கடுமையான வேலைகளைச் செய்ய ஏவினார். நாட்டின் பொது நலத்தையே எல்லோரும் ஒரே நோக்கமாகக் கொள்ள வேண்டியதிருந்தது.

மகாபிரடரிக் 'அறிவு வளர்ச்சி இயக்கத்தின்' அடிப்படையில் முற்போக்குக் கொள்கைகளை பிரஷ்யாவில் செயல்படுத்தினார். இவர் காலத்தில் பிரஷ்யப்படை ஐரோப்பாவிலேயே தலைசிறந்த படையாக இருந்தது மட்டுமின்றி, ஐரோப்பிய நாடுகளுக்கே ஒரு எடுத்துக் காட்டாகவும் விளங்கியது. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் (1740-58), ஏழாண்டுப் போர் (1756-63), போலந்துப் பிரிவினை (1772) ஆகியவற்றின் மூலமாக பிரஷ்யாவின் பரப்பு ஐரோப்பாவில் இரு மடங்காக விரிவடைந்தது. இந்த பிரஷ்யாவின் தலைமையில்தான் பின்னர் ஜெர்மானிய இணைவு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு பிரஷ்யா ஐரோப்பாவில் ஒரு வல்லரசு என்று கருதப்படும் நிலையை அடைந்திருந்தது.

## இங்கிலாந்து (England) :

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு இங்கிலாந்து ஒரு பெரிய குடியேற்றப் பேரரசிற்குச் சொந்தமாக இருந்தது. அப்போது மூன்றாம் ஜார்ஜ் (1760-1820) இங்கிலாந்தின் மன்னராக இருந்தார். இங்கிலாந்து தனது குடியேற்ற நாடுகளிடம் 'பழைய குடியேற்றக் கொள்கை'களையே (old colonial policy) பின்பற்றி வந்தது. இக்கொள்கையின் படி 'குடியேற்ற நாடுகள் தாய்நாட்டின் உடமைகளே. தாய் நாட்டின் நலன்களைக் கருத்தில் கொண்டே குடியேற்ற நாடுகளில் ஆட்சி செய்தல் வேண்டும்' என்ற முறை இருந்தது. இங்கிலாந்து இக்கொள்கையை தனது குடியேற்ற நாடுகளில் ஒன்றான அமெரிக்காவிலும் பின்பற்றியது.

இதன் விளைவாக அமெரிக்காவிலுள்ள பதிமூன்று காலனிகள் இங்கிலாந்தை எதிர்த்து 1774-ல் சுதந்திரப் போரை ஆரம்பித்தன. இந்த போரில் பிரான்ஸ் பதிமூன்று காலனிகளை ஆதரித்தது. போரின் இறுதியில் இங்கிலாந்து தோற்கடிக்கப்பட்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரமடைந்தன. வல்லாட்சி முறையையும், அடக்கு முறையையும் எதிர்த்து அமெரிக்க மக்கள் பெற்ற வெற்றி ஐரோப்பிய மக்களின் சிந்தனையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தேசிய உணர்வு, மக்களாட்சி முறை, அடிப்படை உரிமைகள் ஆகிய கருத்துக்கள் ஐரோப்பிய நாடுகளில் பரவின. இக்கருத்துக்களே பிரெஞ்சுப் புரட்சி ஏற்படவும் ஒரு காரணமாக அமைந்தது.

### ரஷ்யா (Russia):

ரஷ்யப் பேரரசி இரண்டாம் காதரீன் (1762-1796) சிறந்த வல்லரசியாக விளங்கினார். பீட்டரின் கொள்கைகளை அப்படியே பின்பற்றி ரஷ்யாவைச் சிறந்த வலிமைமிக்க நாடாக்க அயராது உழைத்தார். அவரது ஆட்சியில் ரஷ்யா ஒவ்வொரு துறையிலும் பீடு நடைபோட்டது. இவர் தன்னுடைய குறிக்கோளை அடைய அறநெறி ஒழுக்கங்களைக் காற்றில் பறக்கவிட்டார். 1772, 1793 1795-ம் வருடங்களில் நடைபெற்ற போலந்துப் பிரிவினையே இதற்கு சான்று. போலந்து பங்கு போடப்பட்டதன் விளைவாக ரஷ்யாவின் எல்லை பிரஷ்ய, ஆஸ்திரிய நாடுகளின் எல்லைகட்கு அருகே வந்துவிட்டது. இதனால் ரஷ்யா நிலவியல் ரீதியாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவதற்கான தகுதியைப் பெற்றது. ரஷ்யாவின் இந்த பெரும் வளர்ச்சி ஸ்வீடன், போலந்து, துருக்கி ஆகிய நாடுகளின் வளர்ச்சியை மிகவும் பாதித்துவிட்டது. பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு ரஷ்யா ஐரோப்பிய அரசியலில் முக்கியப் பங்கை ஆற்றும் அந்தஸ்தை அடைந்திருந்தது.

### ஆஸ்திரியா (Austria):

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு ஆஸ்திரியா ஹாப்ஸ்பர்க் வம்ச அரசரான இரண்டாம் ஜோசப் (1740-1790) என்பவரால் ஆளப்பட்டு வந்தது. ஜோசப் புதுமையில் அளவு கடந்த மோகமும், பற்றும் கொண்டவர். பகுத்தறிவு, முற்போக்குச் சீர்திருத்தங்கள் ஆகிய வற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். ஐரோப்பாவில் அப்போது நிலவிய முற்போக்குக் கருத்துக்களால் கவரப்பட்டவர். சம்பிரதாயம் சிறப்புரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இயங்கிவந்த நிறுவனங்கள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அடியோடு ஒழித்து பகுத்தறிவுக்கு ஒத்த அமைப்புகளை நிறுவவேண்டுமென விரும்பினர். ஆனால் நாட்டு பிரபுக்களும், சமயவாதிகளும், வணிகக் கோமான்களும் இவரது கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் எதிர்த்தனர். எனவே இவரது திட்டங்கள் தோல்வியடைந்தன. பிரெஞ்சுப் புரட்சியின் போது ஆஸ்திரியப் பேரரசு அதிகமான கிளர்ச்சிகளாலும், குழப்பங்களாலும் புளித்துப் பொங்கும் நிலையினைப் போன்றிருந்தது.

## இத்தாலி (Italy):

பிரெஞ்சுப் புரட்சியின் போது இத்தாலி ஒரு வெறும் '' நிலவியல் சொல்லாகவே'' (Geographical expression) இருந்தது. அது பல நாடுகளாகப் பிளவுண்டு வலிமை குன்றியிருந்தது. முதலில் ஸ்பானிய நாட்டின் ஆதிக்கம் இருந்தாலும் ஸ்பானிய வாரிசுரிமைப் போருக்குப் பின்பு (1702-1713) இத்தாலியில் ஸ்பானிய ஆதிக்கம் செழித்து ஆஸ்திரியாவின் ஆதிக்கம் மலர்ந்தது. இத்தாலியில் தனது செல்வாக்கை நிலை நாட்டும் வகையில் முனைந்து நின்றது. வருங்காலத்தில் இத்தாலியைத் தனது தலைமையின் கீழ் இணைப்பதற்குத் தேவையான வலுவினைப் பெற்றுத்திகழ அது தன்னைப் பலவகையிலும் பக்குவப்படுத்தி வந்தது.

## பிரான்ஸ் (France):

பதினான்காம் லூயி மன்னர் (1643-1715) காலத்தில் பிரான்ஸ் ஐரோப்பாவில் புகழிலும் வலிமையிலும் உச்சநிலையிலிருந்தது. ஐரோப்பிய நாகரிகத்தின் தலைவியாக விளங்கியது. ஆனால் பதினான்காம் லூயி செய்த இடைவிடாத, தேவையற்ற போர்களால் சுமார் இருபது ஆண்டுகள் ஐரோப்பாவே ரத்தக்காடானது. போர்களினால் பொருளாதாரச் சிக்கல் தோன்றின. படைச் செலவைச் சரிக்கட்ட மக்கள் மீது தாங்க முடியாத வரி விதிக்கப்பட்டது. மன்னரின் ஆடம்பரச் செலவுகளால் இந்த வரிப்பளு மேலும் அதிகமானது. 1715-ல் அவர் இறந்த போது தேசக்கடன் தேசவருமானத்தைவிட பதினாறு மடங்கு அதிகமாக இருந்தது. இந்தப் பொருளாதாரச் சீர்கேட்டை அவருக்கப்பின் பதவிக்கு வந்த பதினைந்தாம் லூயி மன்னரால் தீர்க்கப்பட முடியவில்லை

### பதினைந்தாம் லூயி (Louis XV 1715 -1774)

பதினான்காம் லூயிக்குப் பிறகு பதினைந்தாம் லூயி 1715-ல் பிரெஞ்சு அரியணை ஏறினார். இவர் பதினான்காம் லூயியின் மகன் டாபின் (Dauphin) என்பவரின் மகனான பர்கண்டி கோமகனின் (Duke of Burgundy) மகன் ஆவார். அதாவது பதினான்காம் லூயியின் கொள்ளுப் பேரன். இவர் அரியணை ஏறிய போது வயது ஐந்து! எனவே இவரது மாமன் ஆர்லியன்ஸ் கோமகன் பிலிப்பதிலாட்சி புரிந்தார். 1743-ல் அதிகாரத்தை நேரடியாக ஏற்றுக் கொண்டார். பதினைந்தாம் லூயி. இவர் ஒரு திறமையற்ற மன்னர். சுகபோக இன்ப வாழ்க்கையிலேயே காலத்தைக் கழித்தார். இவரது ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையாலும், திறமையின்மை யாலும் மக்களுக்கு மன்னரிடத்திலிருந்த மதிப்பும், மரியாதையும் குலைந்தன. இவருடைய ஆட்சிக்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் பெருமையும், புகழும் மங்கியது.

## ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சி (1715-1723)

பதினைந்தாம் லூயி பதவியேற்றபோது அவருக்கு வயது ஐந்து. எனவே அவருடைய மாமா ஆர்லியன்ஸ் கோமகன் பிலிப் என்பவர் 1715 முதல் 1723 வரை காப்பாளராக பதவியேற்று ஆட்சி நடத்தினார். பதினான்காம் லூயியின் ஆடம்பரச் செலவுகளும் ஐரோப்பியப் போர்களும் நாட்டின் நிதி நெருக்கடியை ஏற்படுத்தின. எனவே பொருளாதார நிதித்துறைகளைச் செப்பனிட்டு அமைக்க வேண்டியது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இவருடைய ஆட்சியில் பதினான்காம் லூயியின் கொள்கைகள் கைவிடப்பட்டு நிர்வாக முறையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. பதினான்காம் லூயி காலத்தில் அதிகாரங்களை இழந்த பார்லிமெண்டுகள் தாங்கள் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொண்டன. சமயத்தில் இவர் பொறையுடைமைக் கொள்கைப் பின்பற்றினார். எனவே தான் ஜேன்சனிசம் என்ற சமயப்பிரிவினருக்கு ஆதரவு அளித்தார்.

## ஜாண்லா (John Law):

ஆர்லியன் கோமகன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது பிரான்சின் நிதிநிலை மிக மோசமாக இருந்தது. நாட்டின் கடன் சுமை வளர்ந்து கொண்டே போனது. செலவுக்கேற்ற வருவாய் கிடையாது. எனவே நிதி நிலையைச் சீர்படுத்த ஜாண்லா என்ற ஸ்காட்லாந்துக்காரர் ஆர்லியன்ஸ் கோமகனிடம் இரண்டு திட்டங்களைச் சமர்ப்பித்தார்.

a) இங்கிலாந்தைப் போல பிரான்சிலும் ஒரு தேசிய வங்கியை நிறுவி அதன் மூலம் காகித நாணயத்தை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்பது இவரது முதலாவது திட்டம். இதன் மூலம் நாட்டின் வியாபாரத்தை ஊக்குவிக்க முடியும் என்று இவர் கருதினார்.

b) அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட வர்த்தகக் கம்பெனி ஒன்றை நிறுவி பிரான்சின் வியாபாரம் முழுவதும் ஏகபோக உரிமையாக அதனிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது இவரது இரண்டாவது திட்டம்.

ஜாண்லாவின் திட்டத்தின்படி 1716-ல் ஒரு வங்கி நிறுவப்பட்டது. அது நல்ல முறையில் செழித்து ஓங்கவே 1718-ல் ஆர்லியன்ஸ் பிரபு அதையே மத்திய அரசாங்க வங்கியாக ஆக்கினார். ஜாண்லாவின் மற்றொரு திட்டத்தின்படி 1717-ல் 'மேற்கத்திய கம்பெனி' என்ற வியாபாரக் கம்பெனி நிறுவப்பட்டது. அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த இக்கம்பெனி நன்கு செயல்பட்டு வந்தது. 1720-ல் ஜாண்லாவின் தலைமையில் வங்கி நிர்வாகமும், கம்பெனி நிர்வாகமும் ஒன்றாக இணைக்கப்பட்டு, நிதித்துறையின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

## டூபாய் (Dubois):

ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சியில் அயல் நாட்டு விவகாரங்களை டூபாய் என்ற அமைச்சர் கவனித்து வந்தார். பதினான்காம்லூயியின் அயல்நாட்டுக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட்டன. ஸ்பெயினுடனான சகோதர உறவைவிட்டு, இங்கிலாந்துடன் ஒரு நட்புறவு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. 1717-ல் பிரான்ஸ், இங்கிலாந்து, ஹாலந்து ஆகியவை ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு தேவையில்லாமல் ஸ்பெயினுடன் ஒரு போர் ஏற்பட்டது. இதற்கிடையில் 1723-ல் லூயி ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய பதினைந்து வயதையடைந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அத்துடன் ஆர்லியன்ஸ் கோமகன் ஆட்சி முடிவடைந்து விட்டது. அதேயாண்டில் அவர் காலமானார்.

## கார்டினல் புளூரி (Cardinal Fleury- 1726-1743)

பதினைந்தாம் லூயியின் நேரடி ஆட்சி துவங்கினாலும் அரசர் சிறுவர் என்ற காரணத்தினால் பூர்பான் கோமகன் (Duke Bourbon) முதலமைச்சராகப் பதவியேற்று அரச காரியங்களை கவனித்து வந்தார். ஆனால் கார்டினல் புளூரி என்பவருக்கு மன்னரிடத்தில் அதிக செல்வாக்கு இருந்தது. இவர் பூர்பான் கோமகனை பதவியிலிருந்து விலக்கி தானே 1726-ல் முதலமைச்சரானார். நாட்டில் போரைத் தவிர்த்து, அமைதியை நிலைநாட்டி, சுபிட்சத்தை ஏற்படுத்த வேண்டுமென்பது இவருடைய நோக்கம். இவரது ஆட்சியில் பிரான்சின் வர்த்தகம் பெரும் வளர்ச்சியடைந்தது. இங்கிலாந்தின் முதலமைச்சர் வால்போலுடன் புளூரியை ஒப்பிடுகிறார்கள் சில வரலாற்றாசிரியர்கள். இவருடைய காலத்தில் நிதி நெருக்கடிக்கு அடிப்படையான காரணங்களான ஆடம்பரச் செலவுகள், பிரபுக்கள், மதகுருமார்களின் சிறப்புரிமைகள் ஆகியவற்றை நீக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட வில்லை. இவருடைய பதவிக்காலத்தில் பொதுவாக அமைதிக் கொள்கையே கடைப்பிடிக்கப் பட்டு வந்தாலும் பிரான்சு போலந்து வாரிசரிமைப் போரில் ஈடுபட வேண்டியதாயிற்று 1743-ல் கார்டினல் பளூரி மரணமடைந்தார்.

## பதினைந்தாம் லூயியின் நேரடி ஆட்சி: (1743-1774)

கார்டினல் புளூரியின் மரணத்திற்குப் பிறகு தானே நேரடியாக நிர்வாகத்தை நடத்த முடிவு செய்தார் லூயி. ஆயினும் இதுவரை சுமார் இருபத்திமூன்று ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பை பிறரிடம் ஒப்படைத்து விட்டு சுகபோக வாழ்க்கையிலேயே ஈடுபட்ட பதினைந்தாம் லூயி இப்போது திறமையாக ஆட்சிபுரிய முடியவில்லை இவரது ஆட்சிக் காலத்தில் சுமார் இருபது ஆண்டுகள் இவரது ஆசை நாயகியான மேடம்டி பாம்படூர் (Madam de Pompadour) என்ற பெண்மணி இவரை ஆட்டிப்படைத்தார். உள்நாட்டு,

வெளிநாட்டு விவகாரங்கள் அனைத்தையும் நிர்வகித்து வந்தவர் இவரே. பிரபுக்களும், குருமார்களும் மக்களை சுரண்டி வாழ்ந்தனர். கொடுமைப்படுத்தினர். மக்கள் மீது ஏராளமான வரி விதிக்கப்பட்டது. எனவே நாட்டின் பல பாகங்களில் மக்கள் கிளர்ச்சி செய்தனர். ஆனால் அவைகள் கொடுமையான முறையில் ஒடுக்கப்பட்டன. ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரிலும், ஏழாண்டுப் போரிலும் பிரான்ஸ் தோல்வியடைந்து ஐரோப்பாவில் தன் பெருமையை இழந்து நின்றது. அரச சபையில் மேடம் டு பாரி (Madam du Barri) என்ற அம்மையாரின் ஆதிக்கமே ஓங்கியிருந்தது.

இவ்வாறு பதினைந்தாம் லூயியின் ஆட்சியில் நிர்வாகம் சீர்கேடடைந்து. மக்களுக்கும் மன்னருக்கும் இடைவெளி அதிகமானது. நாட்டின் கடன் சுமை அதிகரித்தது. நிதிநிலை மோசமாகிக் கொண்டே வந்தது. மன்னரின் ஆட்சியின் குறைபாடுகளும், சீர்கேடுகளும் சுட்டிக்காட்டப்பட்டு கண்டிக்கப் பட்டன. ஆனால் அரசரோ அவைகளைக் கண்டுகொள்ளவேயில்லை. வருங்காலத்தை பற்றி அவர் கவலைப்படவேயில்லை. தன்னுடைய ஆட்சிக்காலத்திற்குப் பிறகு பிரான்சின் வீழ்ச்சி ஏற்படப்போகிறது என்பதை ஓரளவு உணர்ந்திருந்த பதினைந்தாம் லூயி,

''என்னுடைய இறப்பு வரை நிலைமை ஓரளவு சரியாக இருக்கும். எனக்குப் பிறகு பிரளயம்'' என்றார்.

'Things will hold together till my death; after me the deluge' (Apros moi, le deluge) என்றார். இவரது கூற்று பதினாறாம் லூயி காலத்தில் மெய்ப்பிக்கபட்டு விட்டது.!

## பதினாறாம் லூயி (Louis XVI- 1774-1792)

தனது இருபதாம் வயதில் பதவியேற்ற பதினாறாம் லூயி தன் தாத்தா பதினைந்தாம் லூயி விட்டுச் சென்ற எல்லாப் பிரச்சனைகளையும் சுமக்க வேண்டியதாயிற்று. இவர் பல நல்ல குணங்களையும் எண்ணங்களையும் கொண்டிருந்த போதிலும் அரசனாக ஆவதற்குச் சிறிதும் தகுதியில்லாதவர். வேட்டையாடுவதிலும், சாப்பிடுவதிலுமே நேரத்தைக் கழித்தார். சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றாமல் தனது அழகிய மனைவி மேரி அண்டாய்னட்டின் சொற்கேட்டு ஆட்சி நடத்தினார்.

இவர் காலத்தில் ஆட்சிமுறையில் சீர்கேடுகளும், ஊழல்களும் உச்சக்கட்டத்தையடைந்தன. நிர்வாகத்தில் சாதாரண மக்களுக்குச் சிறிதளவும் பங்கு இல்லை. பிரெஞ்சு சமுதாயத்தில் 'பூர்ஷ்வா' (Bourgeoisie) என்றழைக்கப்பட்ட நடுத்தர வகுப்பினரும், சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்த குடியானவர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களும் ஒடுக்கப்பட்டு, உரிமைகள் ஏதுமின்றி அடிமைகளாக வாழ்ந்தனர். ஏற்றத்தாழ்வு எங்கும் தலைவிரித்தாடி சமுதாய அமைப்பையே ஆட்டங் கொள்ளச் செய்தது.

நாட்டின் வரித்துறையில் குறைபாடுகள் மலிந்து காணப்பட்டன. பிரபுக்களும், மத குருமார்களும் பெருமளவில் வரிவிலக்கு பெற்று சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். வரிச்சுமை முழுவதுமே வசதியும், சலுகையுமற்ற பாமரமக்கள் மீது விழுந்தது. நாட்டில் சட்டமும் நீதியும் நிலைகுலைந்து கிடந்தன குழப்பமான சட்டங்களைப் பின்பற்றிய நேர்மையற்ற நீதி மன்றங்களே இயங்கி வந்தன.

இவ்வாறு பிரான்சில் அரசியல், நிதி, நீதி, படை, திருச்சபை ஆகிய துறைகள் அனைத்தும் செயலிழந்து குழப்பத்தை ஏற்படுத்தின. மோதல்கள் எங்கும் காணப்பட்டது. நாட்டுப் புறத்தவர்கட்கும், நகர மக்களுக்கு மிடையே மோதல், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கு மிடையே பகைமை, நடுத்தர மக்களுக்கும் பிரபுக்களுக்குமிடையே சச்சரவு, மன்னருக்கும் நீதிமன்றங்களுக்கு மிடையே பகைமை, போராட்டம். இவ்வாறு பதினைந்தாம் லூயி, பதினாறாம் லூயி மன்னர்களின் காலங்களில் பிரான்சில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார நிலை பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியது.